உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தகுருப்யோநம:,

துர்வாதநிக்ரஹம்

ஆகிய

# ஞானபேதத்துணிவு.

இஃது

சென்னை, வேதாகமோக்த

சைவசித்தாந்த சபையடியவருள் ஒருவரும்,

சென்னை, ப்ரீசர்சமிஷனஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்,

போலிநாவலர் புலமையடக்குபவரும்

ஆகிய

சூ. சுப்பராயநாயகரவர்களால்

சென்னை,

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1887ஸ்

விலை (2) அணா.

கள் தமது நூலுக்குப் பேரிட்டது பிசகென்று கூறியது முதலியனவாம். ஞானபேதவிளக்கம்=ஞானத்தின் மறுதலை விளக்கம் எனப் பொருடருமென்றனர். மூர்த்திபேதம்=மூர்த்தியின்மறுப்பு, சமயபேதம்=சமயத்தின்மறுப்பு, தீக்ஷாபேதம்=தீக்ஷையின்மறுப்பு என இனி நமது பண்டிதர் பொருள்கூறி நாட்டுவார்போலும். இவற்றையுய்த்துணரப்போதாத வெள்ளறிவினராயினர்.

இனிக் காப்புச்செய்யுளில் "நால்வித" மென்பது நாலும் விதமென அமங்கலப்பொருடந்து "தொகையார் பொருள் பலவாய்த்தோன்றுதல், காண்க" என்று ஓர் புதுமை காட்டினர். இக்காப்புச்செய்யுள் அமங்கலப்பொருடந்து நிற்குமென நம்மவர் கூறவே மங்கலப்பொருத்தம் வேண்டுமென்பது அவர் கருத்து. சிவஞானமுனிவர் இலக்கணவிளக்கச்சூறாவளியில் மலைமகளென்பது மலையுமகளெனவும் அமங்கலப்பொருடந்து "தொகையார் பொருள் பலவாய்த் தோன்றலின்" என மறுத்துக்கூறியதையே பற்றுக்கோடாகக்கொண்டு படியெடுத்தெழுதி மங்கலப்பொருத்தமின்மையை நாட்டவந்த வம்மகாவித்வசிரோமணிக்கு அதனுண் மங்கலப்பொருத்த முண்மையுமின்மையு மேனைப்பொருத்தங்களி னிலக்கணமு மெங்ஙனம் விளங்கும்? "பகர்செய்யுண்மங்கலஞ்சொல்லெழுத்துத்தானம் பாலுண்டிவருணநாட்கதியேயென்றூப், புகரில்கணமெனப்பத்தும்பிறங்குகேள்விப்புலவர்புகழ்முன்மொழிக்குப்புகல்வர்" என்னுஞ் செய்யுளிற்போந்தபடி மங்கலமாக வெடுத்துக்கொண்டசொல்லி லாராய்தற்குரிய பொருத்தங்கள் பத்தனுள் அந்தகன்கைப்பட்ட வரதனம்போல வரிதிற்கிடைத்த வச்சிவஞானதேசிகரது வசனப்பற்றுக்கோடான் மலைந்து மங்கலப்பொருத்த முண்மையை யின்மையாக வறியாமையா னுணர்ந்து ஏனையொன்பான் பொருத்தங்களையுஞ் சற்று மாய்ந்துபாராது விடுத்தது யானைகண்டகுருடர் கதைக்கும், கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன் என்னும் பழமொழிக்கு மினமாய் முடிந்தது. அந்தோ பாவம்! மங்கலச்சொற்களே யிவையென்றுணராத விவர், அவற்றினுண்ணிதாக வாய்ந்தறிதற்பாலனவாகிய பொருத்தங்களை யறிவது யாங்ஙனம்? அறம்பொரு ளின்பம் வீடென்னும் புருஷார்த்தம் நான்கனு

ண் மிகச்சிறந்த வீடுபேற்றிற்குக்காரணமா யோராற்றா
னு மமங்கலப்படாது விளங்கும் ஞானம் என்னுஞ்சொல்
லாண்டுள்ளதாகலின், அதுவே மங்கலமாய் நின்றதென வ
றிக. ஆயினது முதற்கண் வாராமையிற் குற்றமாமெனின்,
அற்றன்று. "மூவாமுதலா வுலகமொருமூன்றும்" எனவும், "க
ருவிமாமழைகலைமகளுருவெனவிளங்கி" எனவும், "கந்தமடிவில்
கடிமலர்ப்பிண்டிக்கண்ணார்நிழற்கீழ்" எனவும்வரு மான்றோ
ராட்சிக்குச் சாட்சியாக வடையடுத்தலான் முதற்க
ண் வாராதேனுங் குற்றமின்மை தெளிக. இனி, மங்கல
ச்சொல்லாகிய ஞானம் யாண்டுளதோ வாண்டுத்தானே
பொருத்தங்களெல்லாம் பொருந்தியிருக்க வுய்த்துணர்தல்
வேண்டும். அங்ஙனமின்றிச் சிவஞானமுனிவர் "வகையுளி
சேர்தல்வனப்பின்றுய்கிற்ற, தொகையார்பொருள்பலவாய்த்தோன்
ற, நகைவில், பொருளின்மையீறுதிரிதலேபோல்வ, தருமுதற்சீர்
ச்சொற்காகுந்தப்பு" என்னுஞ் செய்யுளின்படிச் சொற்பொ
ருத்தக் குற்றங்களுட்டொகையார் பொருள் பலவாய்த்தோ
ன்றலாகிய வமங்கலப்பொருடருதலை மலையென்று மங்கல
ச்சொல்லிற் கண்டவாறு அந்தக்குற்றத்தை யறியத்தகுமி
டத்தறியாது வேறிடத்தறியப்புகுந்தது பசுவினது முலை
யினன்றிக் கொம்பினின்றும் பால்கறக்கும் பகுப்பின்மை
யாக முடிந்தது. இனியேனும் நமது ஏழைநாவலர் விபரீ
தத்தாற்கலங்கித் தருக்குறுதொழிவாராக.

இவர் செய்யவந்த காரியத்தைவிட்டுச் சிறப்பறு கா
ரியத்தினுழைந்தார். இஃது கையிலாகாத கயவர் காலப்
போக்குச்செய்யுங் காருடமென்க. இவரது காருடம் பாரி
டமாகத் தலைவிரித்தாட யாமிவரை யொன்று கடாவுகின்
றோம். "ஞானசூடாமணி" எனத் தம்போலிநூலுக்குப் பெ
யர் தந்தது யாதுபயன்கருதி? அதில், ஞானம் இரண்டே
யென முன்பின் மலைவுறச்சாதித்த லொன்றேயொழிய வே
றே யோர் விசேடமுமின்று. இங்ஙனமாக, ஓர் பெரிய
விருட்சத்தி லிரண்டு கிளைகளை முறித்து ஓரிடத்தில் வைத்
து, இது பெரிய விருட்சம் என்று சொல்வதுபோல ஞா
னம் என்னுஞ் சொல்லைப் பலவிடங்களில் வரைந்து, அது

பற்றிய வேறுவிஷயங்களிலோரற்பமுங்கூறாது, அதில் ஸம்பந்தியாத சிலவிஷயங்களைச்சேர்த்துத் திரட்டிய நூலுக்கு (ஞானசூடாமணி) என்று பேரிட்டுப் புகழ்ந்தது அதிசயம்! அதிசயம்!! "வேதாந்த சூளாமணி" என்னு நூலையேனும் பார்த்துத் தெளிந்திடுவாராக. அதில் வேதாந்தவிஷயங்கள் யாவும் பெறப்பட்டிருக்கின்றன. அப்படியேயன்றோ ஞானவிஷயங்கள் யாவும ஞானசூடாமணியிற் பெறப்படல்வேண்டும்? அங்ஙனமின்றிக் குழறிக் கூத்தாடினால் யாவரொப்புவர்? இவரிவ்வளவிலமையாது "உலகெலாம்" என்றற் றொடக்கத்தனவாய வான்றோர் செய்யுள்களைத் தமது போலிநூலின்முகத்திற் பொறித்து, அவற்றில் வேறொதுக்கித் தனிகுறியிட்டுவையாது அவற்றோடொருசேரத் தமது புன்மொழியையும் புணர்த்தி மயங்கவைத்தாரிதென்கொலோ? தமது புன்மொழியையும், எம்பெரியாரது நன்மொழியையு மோரினமாக்கமுயன்றது பசுவாகிய சிவஞானத்தம்பிரானையும், பதியாகிய ஞானஸம்பந்தப்பெருமானையு மோரினமாக்குதற் காதாரம்போலும். இவ்வாறுபுரிதல் திருநீறுங் கண்மணியுங்கொண்டு திரியுஞ் சைவவேடமும், சிலுவைமுத்திரையைத் தாங்கித்திரியுங் கிறிஸ்துவவேட்மு மபேதமெனத்தழுவி யுண்டுகளியாடி யுறவுகொண்டாடும் யாழ்ப்பாணிகளுக்கே சிறக்கும். இங்கேபோந்தவுண்மை ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வெளியிட்டிருக்கும் யாழ்ப்பாணசமயநிலையிற் கண்டறிந்தடங்குக.

இனி "ஞானம்" என்பதனிலக்கணமும், அதன்பொருளும் யாஞ்சொல்லவறியாது மயங்கினதாகக் குறைகூறித் தமதறியாமையைப் புலப்படுத்தி யிடர்ப்பட்டார். யாம் ஞானம் இது எனப் பலருமறியப் பரியாயநாமத்தை விளக்கியதேஅதுவாம். இவ்வுண்மை கண்டுணராது "பொருட்குப்பொருடெரியினது வரம்பின்றே" என்றதுமுதலிய சூத்திரங்களைப் பயனிலவாக வெடுத்தாண்டது பரிதாபமென்க. இதனைக் கண்டு தெளிந்தபேர் "விளங்கும் என வொருசொல் ஆண்டு

மிகையாய் நின்றதுங்காண்க" என்று பிணங்கியுரைத்ததைக் காற்கடைகொண்டு பேதிப்பரென்க.

இனிநிற்க, "தேகமுதலிய ஜடப்பொருள்களையன்றி வேறு சித்துப்பொருள்களில்லையென்று அறியும் அறிவே பாசஞானம்; ஆன்மாவாகிய சித்துப்பொருளையன்றி வேறு ஜடசித்துப்பொருள்களில்லையென்று அறியும் அறிவே பசுஞானம்" என வெமது விளக்கத்திற்கூறிய பகுதியில் "ஜடப்பொருள்களையனறி" எனவும், "சித்துப்பொருளையன்றி" எனவும் போந்தவற்றுளையுருபுகள் முடிவின்றி வாளாகிடக்கவுரைத்தார் எனவும், அவைகளை ஜடப்பொருள்களன்றி யெனவும், சித்துப்பொருளன்றியெனவுங் கூறுதலே யமையுமெனவுங்கூறித தாம் இலக்கணத்திற் புலியென்பதைக் காட்டினார். அதனை நிறுத்த "ஆண்டுபொருள்களென்பன எழுவாய் வேற்றுமையாகியே நின்று உண்டு என்னும் பயனிலைகொண்டு முடிதலான்" என்று நியாயத்தையு காட்டினார். வாக்கியங்களி லர்த்தத்தைச் செவ்வனேயறியுந் திறமற்று பலவுபடகொள்ளுதலே யவரியற்கைபோலும். என்னெனின், (ஜடம் - அறிவே) என்னும் வாக்கியத்தில (பொருளை) எனபதிலுள்ள விரண்டனுருபு "எல்லையின்னு மதுவும்பெயர்கொளு, மல்லவினைகொளு நான்கேழிருமையும், புல்லும்பெரும்பாலுமென்மனார்புலவர்" என்னும் ஸூத்திரப்படி அறிதல் என்னும் வினையைக்கொண்டு முடிந்து, ஜடப்பொருள்களை யறிதலல்லாமல் சித்துப்பொருளை யறிதலில்லையென்னும் பொருளைச் சாமானியருந் தெள்ளிதினுணருமாறு பயந்து நிற்கவு மதனையுணராது அவ்வையுருபு வாளாகின்றதெனவும், அவையெழுவாய்த்தொடரா யிருத்தல்வேண்டுமெனவும், அவ்வாக்கியத்திலில்லாத (உண்டு) என்னும் வினையை வருவித்துக்கொண்டு, அது பயனிலையாகுமெனவும் மனஞ்சென்றவாறு வரைந்து மருண்டனர். இவரதிலக்கணப்புலமை யிங்ஙனமாயி னிவரிழிவுக்கியாதுதா னுவமையாகும்? இஃது ஏனைய வையுருபுக்கு மொக்கும். இவ்வுண்மை (அவனையன்றி வேறொருவ னில்லையென்றறியுமறிவே முக்கியவறிவு) என்பதனானு நிலைபெறுதல் காண்க. அவர்கொ

ண்டவாறுகொள்ளி னெடுத்துக்கொண்ட பிரமேயஞ் சிதைவுபெறும்.

இங்ஙனநிற்க, பாசஞானம்-பசுஞானம் - பதிஞானமென்னுஞ் சைவபரிபாஷைகளுக்கு எமதுநாயகர் பரபக்கமாகவே யிலக்கணமுரைத்தாரெனவும், அவை சைவவிலக்கணமாகாவெனவுங் குழறித் தாம்புதுமையாகக் கண்டுபிடித்த வாபாஸசைவத்தைக் கொட்டியளந்தார். தாம் பூர்வபட்சஞ்செய்தவைகளுக்கும், ஸித்தாந்தப்படுத்தியவைகளுக்கும் பிரமாணந்திட்டிக் காட்டாமையால், அவர்கூறியவை வெறுஞ்சொல்லாக முடிந்தன.

இனி "பதி நிர்மலசித்தாகையால் அதுவும் ஒன்றினையு மறியாது" என்று யாம் கூறியதில், பதியானது பாசம்போலவொன்றினையு மறியாதென்றல் பொருந்தாதென மறுத்துக்கூறினர். பதி ஒன்றினையறியுமிடத்து நிர்விகாரப்பொருளாதலிருக்கும். "தன்னையறியாது வேறுண்டாய்த்தானறியா-தன்னிலொழிவாறுதிப்பீ ரென்றுமிலை - சந்நிதிக்கே, யஞ்ஞதொழிலாமதனை யாராய்வாககாலே, கிஞ்சளவுகேட்டலுமாகும்" என்றுமொழிவிலொடுக்கத் திருவெண்பாவையு மதனுரையையும்பார்த்துத் தெளிந்து குணப்படுவாராக. இதனையறியாது இஷ்டம்போலபிப்பிராயத்தை வருவித்துக்கொண்டு சைவவரம்புகெட வீணிலக்கணம் விரித்துச் செருக்குற்றது அவரது வினையென்க. இவர் போலிநாவலர் அல்லது நாவிலரெனச் சிறக்கவுரியார். இங்ஙனமாக, தமதுபோலிநூலின் முகப்புப்பத்திரத்தில் வைதிகசமய மதோத்தாரணர் என்னுமோர்பட்டமும் வரைந்துகொண்டனர். இது அவரது தற்போதக்கொழுமையென்றறிக.

இங்ஙனநிற்க, "பதியாகியசிவன்" எனத்தொடங்கி "அமையாவென்னும்" எனமுடித்துக்காட்டிய வெங்கணூரெின்விஷயத்தை யநுவாதமாகத் தமது நூலிலெடுத்தெழுதிக்கொண்டு அதற்குப் பதில்சொல்லவந்தவர் ஈழநாடு-தொண்டைநாடுகளையிழுத்து இழுக்காடி யொழிந்தார். தாம் அநுவாதஞ்செய்ய வெடுத்துக்கொண்ட முப்பத்தைந்து

வரிகளி லிவருக்குப் பிரமேயமாகத்தேர்ந்தவரிகள் நாலே யாயினும், பதங்களை முன்பின்றள்ளிப்பார்த்தா லிரண்டுவ ரிகளேதேறும். இரண்டுவரிகளிலுள்ள விஷயத்தையெடு த்து மறுப்பதற்கு முப்பத்தைந்துவரிகளை யெடுத்தெழுதி க்கொண்டது தமதுபுத்தகத்துக்குப் பக்கங்ளைணிரம்பவே யன்றி வேறில்லை. இந்தக்கணக்கின்படிப்பார்த்தா லிரண்டு பாரங்களான்முடிந்த வவரதுநூல் ஓரரைப்பாரத்திலேதா னே யடங்கும். இனி யவரெடுத்துக்கொண்ட விடயப் பெருமித மித்திறத்ததென்பதைக் கொஞ்சம்விளக்குவாம். "தொண்டைநாட்டாருட்பலரும், ஈழநாட்டாருட்சிலரும் நங்கொ ள்கையைத் தழீஇநிற்கின்றார். ஈழநாட்டாருட்பலரும், தொண் டைநாட்டாருட்சிலரு நம்மறுதலைக்கொள்கையைத் தழீஇநிற்கின் றார் என்று போதருவித்ததியாது" என நம்மவர்கடாயினர். இ வர்கடாயினதாற்போந்த விருவாக்கியங்களு மொரேபொரு ளைத்தந்து, அவற்றுளொருவாக்கியமே பயன்பட்டு மற் றொன்று பூர்வபட்சியினது வெறுஞ்சொல்லடுக்காகமுடிந் தது. எங்கணூரலிற் போதராததொன்றைப் புதுமைப்ப டக்கிறுத்தி யாளவந்தது அவரது வெள்ளறிவினதியற்கை யென்க. ஞானமிரண்டென்னுங்கொள்கையும், ஞானநான் கென்னுங் கொள்கையும் ஸமபலமுடையனவாதல் யாங்ங னம்? அவை ஸமபலமுடையனவென யாம் கூறியதாக வவர்வருவித்தொழிந்தது யாது? தொண்டைநாட்டாருட் பெரும்பாலார் எம்மோடொப்ப நான்குஞானங்களைத்த ழுவிப் பொருள்கூறுமுகத்தானே யெம்மில் வேறுபடுகின் றாரென்று அவரை யாம்பிரஸ்தாபித்தது அவர் எம்மிற் குறைந்தவரென்பதும், ஞானமிரண்டேயெனக்கூறு மீழ நாட்டாரிலுயர்ந்தவரென்பதும் போதரவென்க. இஃத றியாது "இக்கூற்றினலவர்க்குப்போந்தபலம்யாது" எனத்தருக் கியது அவரதுள்ளத்திருக்கின்பாலதாயிற்றென்க. இனி யாம் சேரநாட்டார், சோழநாட்டார், பாண்டிநாட்டா ர்களை வருவித்துரையாதது குன்றக்கூறலென்னுங் குற்றம் பட வருகியதென்றுருகினர். நாடுகளை முக்கிய மமுக்கிய மாகக்கொள்ளாம லந்நாட்டிலுள்ளவர்களையே முக்கிய

மமூக்கியமாகத்தெரிந்து கூறினேமாகையால், யாஞ்சேரநா
டுமுதலியவைகளை வருவியாதொழிந்தது குன்றக்கூறலெ
ன்னுங் குற்றத்திற்பட்டதாகாது. இப்போது நேர்ந்தவாத
மீழநாடு, தொண்டைநாடுகளிலுள்ளார்க்கே யாதலானும்,
சேரசோழபாண்டிநாட்டிலுள்ளார்க்குந் தொண்டைநாட்
டிலுள்ளார்க்கு மன்றாதலானும், தொண்டைநாட்டாராகி
ய வெம்மோடிகலிவாதிடல்போற் பூர்வம் பாண்டிநாட்டா
ரோடிகலி யீழநாட்டார்வாதிட்டாராதலானும், அந்தவா
தி யீழநாட்டாரோ தோற்றாராதலானும், அது இசைவாது
புத்தவாது எனச்சிறந்திருக்கின்றமையானும், சேரசோழ
பாண்டியநாட்டார்க்குந் தொண்டைநாட்டார்க்கும் யாண்
டு மோர்விதவாதமு நேராமையானும், "தொண்டைநாடுசான்
றோருடைத்து" என உலகன்னையாகிய ஒளவையார் கூறினா
ராதலானு மெம்மோடிகலி வேறுபாடெய்தாத சேரசோ
ழபாண்டியநாட்டார்களை யாம் வருவியாதது குற்றமாகா
து. வேறுபட்டவரையே யாம்பிரஸ்தாபித்தொழித்தனம்.
இவ்வளவுகண்டுதெளியாது நபதிமுக்கவிராய ரிறுமாந்து
"சிறியகேள்வியோர்கழியவுஞ்செருக்குடையார்" என்பதற் கில
க்காயினர்.

இதுகாறும் யாம் விவகரித்துவந்தவை மற்றொன்று
விரித்தலென்னுங் குற்றம்படப் பூர்வபட்சியார் புலம்பியவ
ற்றை மறுக்கத்தலைப்பட்டனவேயாம். முதல்விவகாரம் செ
ங்கிராதையருக்கு மெமகருமென்பது யாவருமறிவார்கள்.
செங்கிராதையர் "சிவனடியே" என்னும்பாடலி லிரண்டு
ஞானங்கூறினர். அது பிரமாணபூர்வகமாக யாம்நிரூபித்த
நாலுஞானத்தின்முன்னர் நசித்தபோது அவ்விருஞானி
யாரத்தோடேதொலையாமல் ஸம்பந்தரைப்பசுவென்று பிர
ஸ்தாபித்துப் பாடாயினர். அவருக்காகவோ, அவர்நா
டே தமது நாடாகையா லந்தநாட்டுக்காகவோ, தந்தலையி
லேற்றிக்கொண்ட நாவலர் என்னும் பட்டத்துக்காகவோ,
வைதிகசமயமதோத்தாரணர் என்னும் பேருக்காகவோ,
வேறு எதற்காகவோ பரிந்து நமது போலிநாவலர் புறப்

பட்டுத் தலைநீட்டினார். அங்ஙனம் வெளிவந்தவர் தாம்வந்த காரியத்தைச்செய்யாமல் வாளாகாலப்போக்குச்செய்தனர். அது அவரது மதியின்றாழ்வென்க. இந்தச் சிறுநாவலர் "வெள்ளறிவுடையராய்நின்று எள்ளுநரை அவர்தந்தோல்வித்தானத்தை வெளிப்படுத்துதலல்லது எள்ளப்படுவோர்க்குச்செய்யு மேதமொன்றில்லாமையானும், அவர்பழித்துரைபொறுத்தல் அறனாய்ச் சிறக்குமென்பவாகலானும், அவர்பழித்துரைகளை நியாயங்கொண்டுகளைய முயறலுரும்; அணிகலனெனக்கொண்டுவந் தடங்குதலே செய்வாமென்க. அல்லதூஉம், நாம் வாதுசெய்யும்பூசலுக்கெதிராகக்கடவமன்றித் தீயவாய்த்திறந்துவையும் பூசலுககெதிராகக்கடவமல்லேமென்றுஞ் சொல்க" என்று மதுரவாய்மணக்கப்பேசினார். இஃதுண்மையெனின், "இயல்வரம்புதெரிந்து நியாயநெறிகடைப்பிடித்து ஆராய்ந்து பொருளுண்மைதேறுந்தவமுயற்சியில்லாமையால்" எனவும், "பொய்ப்பொருள்கூறித் தம்மைத்தாமே இறப்பவுணர்ந்தாரெனமதித்துக் கழிபெருங்களியாட்டயராநிற்பர்" எனவும், "தந்தம்வெள்ளறிவுகொண்டு - தொல்லைவரம்பழித்துப் போலிப்பொருள்கூறிக் களியாட்டயராநிற்பர். நல்லாசிரியரவர்பொய்ப்புலமைகண்டு ஏயே! இவர்புலமை யிஃதோவென எள்ளி நகையாடாநிற்பர்" எனவும், "பிறழ்ந்துகிடக்குங் குற்றங்களை ஆண்டாண்டுரைக்கப்புகின் பெருகுமாகலின், அவற்றினை லக்ஷியப்படுத்தாமல்விட்டு" எனவும், "கொன்னேபுலம்பியொழிந்தார்" எனவும், "அவர்கூற்று ஊகமில்லாத மடவோர்கூற்றேயாய் ஒழிந்ததென்க" எனவும், "அவர்கூறிய குளறுபடைஞானமுதலியவகையறியாமை அவரையேசாரும்" எனவும், "பழிச்சுரையும், தருக்குரையும் அவர்தம்போதவிளக்கத்தின் மிகுத்துரைத்தார். அது தோல்வித்தானம் எய்தும் வாதிகதையாகலானும் பயனொடுபடாமையானும் யாம் அவற்றைமறுத்துரையாம்" எனவும், "இவர் அறிவின்பெற்றி எற்றெற்றென்று நல்லோரெள்ளி நகையாடிடப்படுவர்" எனவுங் கண்மயக்கேறினார் செய்கையொத்து வரம்பிகந்து வசைகூறுமாறென்னை? நெல்லாலடித்தாற் கல்லாலடிப்பாரெனவறியார்போலும். இவரது நிலைமை சாலவழகுடைத்து. தோல்வித்தான மெய்துவார்பக்கனைஜமாகும் பரநிந்தை வெற்றித்தான மெய்தியிருக்குமிவர்பாற் கொழுமைகொண்டோங்கியவாறென்னை? பிறர்தூற்றுந் தூடணங்களை யணிகலமெனத்தாங்கும் பொறையாளராகிய விவர் "அவர்புலம்

பிறார்" எனத் தாம்புலம்பிக்காட்டுமோறென்னை? "இவ்வேசிம கனை நானெங்குவைவேதேன்" என்றுாையாடு மாதர்கூற்றைத் தழுவி யேதமுற்றனர். இவரது புலமையிருந்தவாறந்தோ! அந்தோ!! ஆச்சரியம்.

இங்ஙனமிற்க, யாம் விவகரிக்கவந்தது சேக்கிழார் கூறியஞானம் இரண்டல்ல, நான்கெனப்பது. இதற்கிடையில் ஞானஸம்பந்தர் கடவுளல்ல, பசுவென வோர்புதுசித்தாந்தம் முளைத்தது. அதனையும் வெட்டியெறிந்தோம். இவ்வளவேயன்றி வேறில்லை. இதற்கு மறுப்பு எழுத வாசைப பட்டவர் எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சாதிக்கவேண்டும். அஃதொழிந்து எம்மையும், எமது நாயகரவர்களையும் பலவாறு புலமையில்லாதவரெனப் புன்மொழியால் வைது பொங்கிவழிதலென்னையோ வறியேம். யாம் எடுத்த விஷயங்களைத் தாபிக்கவெழுகின்றேம். நமது பண்டிதர் தமது பாண்டித்யத்தைத்தாபிக்க வழுகின்றார். இவர் தமது புலமையைத் தாபித்தலாற்பயனென்னை? ஒருவன் றன்செல்வச்செருக்கடைதலாற் பயனென்னை? கல்விச்செருக்குஞ் செல்வச்செருக்கு மொருநிலையினவாம். செல்வமுடையவ னச்செல்வத்தை நல்வழியிற்செலுத்தி யுய்யும்வழி தேடினன்றிப் பெருமையுறான். நல்வழியிற்புக்கபோது அவன் செருக்குதலுஞ்செய்யான். நன்னெறி நாடாதபோதே யச்செருக்கவனை யாட்டிபபுடைக்கின்றது. இப்படியே கல்வியுடையவ னக்கல்வியை நல்வழியிற்செலுத்தி யுய்யும்வழி தேடினன்றிப் பெருமையுறான். நல்வழியிற்புக்கபோது அவன் செருக்குதலுஞ்செய்யான். நன்னெறிநாடாதபோதே யச்செருக்கவனை யாட்டிப்புடைக்கின்றது. இவ்வுண்மையைப் பரியாலோசிக்கிறபோது நமது யாழ்ப்பாண நண்பர் நாவலர் எனத் தான்றோன்றிப்பட்டந் தாங்கியதும், சிவவேடத்தவரைக் கல்வியில்லாதவரெனக் கழறிமகிழ்வதும், வைதிகசமயமதோத்தாரணர் என்று தன்காலைத் தானே கும்பிட்டுக்கொள்வதும், பிரஸங்கசபையில் ஒருவர்பேரைப் பிரஸ்தாபித்துத் தமோந்தகாரத்தின்மூழ்கித் தன்வசமழி

க்கு தூஷித்தலும் பித்தர்செய்கையாயொழிந்தது. கல்வியினாலொருவனை மதித்துப்பூசித்தலென்றால், வீரமாமுனியென்னுஞ் சிவத்ரோகியும் பூஜ்யனாவன். புத்தர் சமணர்முதலிய புறசமயிகளும் பூஜ்யராவர். கற்றவர்களாகிய சமணர்களெல்லாங் கல்வியின்பயனாகிய சிவநேசமும், சிவனடியார்நேசமுமில்லாதபோது கழுவேறறப்பட்டமையால், அவரோடினப்பட்டு அச்சமணரைக் கழுவேற்றிய ஞானஸம்பந்தர்பால் விரோதம்பூண்டு அவரைப்பசுவென்று நிந்தித்துக் கல்விச்செருக்கையே கைலைவாழ்வாக மதித்துக்காலம்போக்கும் நமது புதுநாவலரை யாவரெனக்கொள்வது? உண்மை யொருவனுக்கு ஸித்திக்கவேண்டுமாயின், கல்வியு மறிவுந் திறனு மொருபயனுஞ்செய்யாது. திருவருளே யாவுந்தருவது என ஆன்றோர் நிச்சயித்திருக்கின்றாராகலானும், " உன்றிருவடிக்கீழுறுதியாமன்பு முன்றிருவருளினாற்கிடைப்ப, தன்றிநூற்பலவு மாய்ந்ததானுரைசெ யளப்பருந்திறமையான்மதியான், மன்றவேகிடைப்பதன்று" என்பதே அதுவாகலானும், அருண்மாட்சியையும், அருள்வயப்பட்ட முதியோர்பெருமையையும் வியவாது மருண்மாட்சியையும், அதன்வயப்பட்ட வறியோரிழிவையும் வியந்து தாமு மந்நிலைக்களநீங்காதுநின்று தருக்கித் தம்மைத்தாமே கொண்டாடித் தளர்கின்றமையானும் நமது யாழ்ப்பாணப்பண்டிதர் செய்கையைச் சீ! சீ!! என விகழ்ந்து பெரியோரொதுங்குகின்றனர்.

இதுகாறும் எழச்சான்றோர் செருக்கிய வவரது இழிவை யெடுத்துக்காட்டிக் களைந்தோமாகையால், இனி அவரது ஞானவிசாரமினைத்தென்பதையு மெடுத்துக்காட்டி, அவரகந்தையிருளையோட்டி, எங்கள் ஞானஸம்பந்தனது அருள்விலாஸத்தைகாட்டி யுபகரிப்பாம். "சிவனடியே" என்னும் பெரியபுராணத்திருப்பாட்டில் கேட்டன் முதலிய நான்கும் முக்கியப்பொருளாக வுரைக்கப்படவில்லையெனவும், அவை முக்கியப்பொருளின்வழி யுட்படுபொருளாகப் பெறப்படுகின்றனவெனவு மோருண்மை கண்டுபிடிக்

தார். இவ்வுண்மையைக் கூறுதும் என்று தொடங்கினவர் அதனைவிடுத்து, ஞானத்தின்சொரூபமும், அது இருமுதலாமாறும், கேட்டன்முதலிய நான்கும் அவ்விரண்டன்வகையாமாறும் முன்னர்த்தெரிவிப்பாம் என்று வேறு ஒன்றினைத்தொடுத்துக்கொண்டனர். எடுத்தவிஷயத்தைத தொடங்குவதற்கு இடர்ப்பட்டு மதிமாற்றமெய்தினராகிய வப்புதுநாவலர் முதற்கோணல் முற்றக்கோணல் என்பதற்கிணங்கத் தலைதடுமாறியுரைத்த வாபாஸங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. எல்லா மாபாஸமாயின் என்செய்வது? அவைகளை முறையேகாட்டி யொழிப்பாம்.

அவர் பௌஷ்கரத்தில் "ஶிவஸ்ய ஸமவேதாயா" என்னுமோர் வசனமுண்டென்றுகாட்டி அதற்கு "சிவனுடைய சமவேதஞானசத்தியே ஞானமென்று நூல்களாலுரைக்கப்படும்; சத்தம் அந்தஞானம விளங்குதற்கு ஏதுவாம்" எனப்பொருள்விரித்தனர். இதில், சமவேதசத்தியென்பதொழியச் சமவேதஞானசத்தியென்று பெறப்படவில்லை. இல்லாததொன்றையேற்றினதால், ஞானமேஞானம் எனப்பயன்பெறுதாகிய சத்தியே ஞானம் என்று முண்மைக்கிடர் தேடியதாயிற்று. "சத்திதனைவடிவேதெனிற் றடையிலாஞானமாகும்" என்றாரெபரியோரும். இனிச்சத்தம் அந்தஞானம் விளங்குதற்கு ஏதுவாம் என்று எழுதிககாட்டினரேயன்றி யந்தச்சத்தமு மொரு ஞானந்தானென்று விளக்கிக்காட்டினாரில்லை. அங்கேபெறப்பட்டது ஞானம் ஒன்றேயென்பதும், சத்தம் அதற்கேதுவாமென்பதுவேயாம். இதனால், நமது பண்டிதர் (அது இருமுதலாமாறும்) எனப் பிரஸ்தாபித தற்கிடமேயில்லாதொழிந்தது. சத்தத்தையும் ஞானம் எனக்கூறி அபரஞானமென நூல்கள் பிரஸ்தாபிப்பது ஔபசாரிகமாம். சத்தியை ஞானம் என்று விளங்கவுரைத்தது போல், சத்தத்தை ஞானம் என்று அந்தவசனமுரைத்திலது. இந்தவுண்மையால் ஞானம் ஒன்றேயென்பது தீர்மானம். இதனால், நம்மவர் தமது இருஞானஸ்தாபனத்துக்குத்தேடிய பௌஷ்கரவசனம் அவரைத்தெருவில்விட்டது.

இனிச் சிவப்பிரகாசத்தில் "உயர்ஞானமிரண்டா மாறு மலமகலவகலாதமனனுபோதத், திருவருளொன்றென்றதனைத்தெளியவோதுஞ்சிவாகமம" என்னும் வாக்கியத்தில ஞானமிருமுதலாமாறு பெறப்பட்டதெனவும, இந்தச்சிவப்பிரகாசச்சுருதி மேற்கூறிப்போந்த பௌஷ்கரசசுருதிக்கு உபபிருங்கணத்துணிபுளாயா யெழுந்ததெனவு நமது கவிராயர் கழறினர். சுருதி என்னும்பேர் வேதமொன்றற்கே ரூடியும், ஏனையநூல்களுக்கு யோகமுமாம். வேதத்தைச்சுருதியென்றபோது அதற்கு உபபிராஹ்மணமாகவுரைக்கும் புராணமுதலியவைகளையுஞ் சுருதியென்றல்கூடாது. சுருத்யுபபிராஹ்மணம் சுருதியாகாது. சுருத்யுபபிராஹ்மணம் ஸ்மிருதிபுராணமுதலியனவாம். இதனல், வேதத்தில் வேறுகாது விளங்கும் பௌஷ்கரச்சுருதிக்குச் சிவப்பிரகாசச்சுருதி உபபிருங்கண மெனக்கூறியது தெரிவின்மையாயிற்று. அதவா வொன்றுக்கொன் றுபபிராஹ்மணமெனக் கொண்டகாலத்து மவைநிலைபெறு. பௌஷ்காரத்தில் இருஞானம்பெறப்படாமையும், சிவப்பிரகாசத்தி லிருஞானம் பெறப்பட்டமையும்போதரலால். இரண்டுஞ் சுருதிகளானல் பௌஷ்காரத்துக்குச் சிவப்பிரசாசம் உபபிராஹ்மணமானபடிச் சிவப்பிரகாசத்துக்குப் பௌஷ்கரமு முபபிராஹ்மணமாகும். சுருதிக்கு ஸ்மிருதிபுராணங்க ளுபபிராஹ்மணமாக நிற்பனவன்றி ஸ்மிருதிபுராணங்களுக்குச் சுருதி யுபபிராஹ்மணமாகவில்லாது. இவைகளை யாராயுமிடத்து நமமவ ருபபிராஹ்மணச் சொற்பிரயோக மிடனறியாதுசெய்திடர்ப்பட்டாரென்பது தெற்றெனவிளங்கியது. அன்றியும், சிவப்பிரகாசம் சிவஞானபோதத்தின் சார்புநூலாயுள்ளது. அச்சிவஞானபோதம் ரௌரவாகமத்தில விளங்குவதொன்று. இதனல், ரௌரவச்சுருதிக்குச சிவப்பிரகாசம உபபிராஹ்மணமாயிருத்தலே யமைவுடைத்து. ஏனையாகமங்கள் ரௌரவத்தோ டொற்றுமையுடையனவேனுஞ் சிறப்புநோக்கியவழிச் சிவப்பிரகாசத்துக் காதாரமாகமாட்டா. அவையிவ்வாறொதுக்கப்படவே நம்மவரொன்றற்கொன் றுபபிர

ஒற்மணமெனவுதகரித்துக்காட்டியது நிஷ்பலமாயிற்று. இவ்வளவிலமையாது "உயர்ஞானமிரண்டாம்" என்னுஞ் சிவப்பிரகாசச்செய்யுளில் கேட்டன்முதலிய நான்குஞானங்களும் முக்கியப்பொருளி னுட்படுபொருளாகப் பெறப்பட்டனவெனவும், அம்முக்கியப்பொருள்கள் பரம் அபரம் என்னு மிருமுதலாமெனவும், இவைதா மோரினமாதறெரிய உயர்ஞானமிரண்டாமென்று நிர்வசனஞ் செய்யப்பட்டுள்ளனவெனவும் விவகரித்தார். சேக்கிழார்திருவாக்கில் முக்கியப்பொருள், உட்படுபொருள்களை நாட்டமுயன்றமையே யீண்டுமவரது அபிமதமாக முடிந்திருக்கின்றது. "உயர்ஞானமிரண்டாம்" என்பதில் இரண்டுஞானமே முக்கியப்பொருளென்பது அதிற்போந்த "இரண்டாம்" என்னும் பிரயோகம் அறிவித்தது. கேட்டலாதிகள் அவற்றினுட்படுபொருள்களென்பது எமக்கு முடன்பாடே. இந்தப்பாட்டுக்குமாத்திரம் அவ்விருஞானம் முக்கியப்பொருளாமேயன்றி "சிவனடியே" என்னும் பாடலுக்கும் அவை முக்கியமாகுமென்பது கூடாது. ஏனெனின், அந்தப்பாடலில், ஞானம்-ஞானம்-ஞானம்-ஞானம் என நான்குமுறை ஞானப்பிரயோகங்களுண்டாகி இரண்டுஞானங்களென்றெண்ணுதற்கு மிடஞ்செய்யாமையால். இதனால், சேக்கிழார்திருவாக்கிற் கேட்டலாதி ஞானங்களே முக்கியப்பொருளாதல்சிறந்தது. இவற்றை யுட்படுபொருளாகக்கூறியது பொருமையானெழுந்த போதத்தின்பயனென்க. அதிற்பெறப்பட்ட வொவ்வொருஞானமுந் தனித்தனி யொவ்வொருவிசேடணந்தா னமைந்துவிளங்கு மூண்மையை ஞானபேதவிளக்க முதலியவைகளில் யாமெடுத்துக்காட்டியிருக்கவும், அதற்குப்பதில்கூறாமல் "கொடிறும்பேதையுங்கொண்டதுவிடா" என்றபடிச் சொன்னதையேசொல்லிக் காலம்போக்குவது அவரது கௌரவத்துக்குப் பெருங்குறைவென்க. இவ்வளவிலமையாது கேட்டலாதி நான்குஞானங்களைப்போலச் சுத்தாவத்தைபற்றி யைந்தாயும், வேறுவகையா னேழு, எட்டு முதலாகப் பலவாயும் ஞானம்விள

ங்கலான் ஞானம் நான்கேயென்பது அமையாதெனவும், இவையாவும் ஞானமிரண்டிலடங்கி யவைதாமே யிருமுதலாகியுயர்ஞானமாகவிளங்குமெனவும், "உயர்ஞானமிரண்டாம்" என்னும்பிரமாண மிதற்குச்சான்றெனவு நமதுபண்டிதர் சில நியாயங்களெடுத்துக்காட்டினார். ஞானவேள்வியைந்தனுள் ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல்களை ஞானமன்றெனக்கழித்து எஞ்சிய கேட்டல் சிந்தித்தல்களைமாத்திரமே ஞானமெனத்தழுவி, அவற்றோடு தெளிதல்-நிட்டைகளைச் சேர்த்து உண்மைஞானமெனப்படுவன விந்நான்குமே யென்று சிவஞானமுனிவர் சித்தியார் பொழிப்புரையிற் செவ்வனே கூறினமையால், நமது புதுநாவலர் சுத்தாவத்தைமுதலிய சரக்குகளையெல்லாம் யாழ்ப்பாணத்திலிருந்து அவரது அறியாமையென்னுந் தோணியிலேற்றிக்கொண்டுவந்து அவைகளுக்கும் ஞானமெனப்பேரிட்டு அவரையொத்த அஞ்ஞானிகளுக்கு விலைகூறித்திரிவது பிழைக்கமாட்டாதவர் செயலாயிற்று. "கேட்டலுடன்சிந்தித்தறெளிதனிட்டை, கிளத்தலெனவீரண்டாங் கிளக்கின்ஞானம்" எனப் பிரமாணம்போதருமாறு அவைகளுக்குயாண்டும் போதராமையானும், உண்மைஞானமெனப்படுவன கேட்டலாதி நான்குமேயென்று திராவிடபாஷ்யமுனிவர் நிலைபெறுவித்தமையானும், ஓத லோதுவித்தல் கேட்பித்தல்களை யவர் ஞானமன்றென வொதுக்கியவேதுவா லவர்ஞானமெனத் துணிந்து கூறியவற்றின் வேறாயுள்ளயாவு ஞானமாகாதென்றே துணியப்பட்டமையானுங் கேட்டலாதி ஞானங்களோடொப்ப வேறுஞானங்களுமுண்டென்று தாபிக்க வந்தது தலைகவிழ்ந்துபோயிற்று. இங்கேபோந்த நியாயங்களாற் கேட்டலாதிகணான்குமே யுண்மைஞானமெனத் துணியப்பட்டமையால், இவற்றை விரோதித்து இருமுதன் ஞானமே யுயர்ந்தஞானமெனத் தாபிக்கவந்ததுந் தட்டழிந்துபோயிற்று.

இந்த நான்குஞானங்களு மிருமுதன்ஞானத்திலடங்கி யவ்விருமுதன்ஞானங்களும் உயர்ஞானம்இரண்டாம்

எனச்சிறக்குமென்றுகூறிய வவரது ஏழைமையையுங்கொ ஞ்சம் விரிப்பாம். இந்த நான்குஞானங்க ளிரண்டுஞானங் களி லடங்கியவாறு அவ்விருஞானங்களு மொருஞானத்தி லடங்குகையாலும், தாம்கூறு மிருஞானங்களிற் பரஞான த்தின்முன்ன ரபரஞானம் பூருவபக்கமாகின்றமையாலும ஞானம் இருமுதலாமென்றதும், அதுவே யுயர்ந்தஞான மென்றதும் பொய்யாயொழிந்தது. சிவப்பிரகாசத்தி லுயர் ஞானமிரண்டெனறு கூறியது உயர்ந்தஞானமானது இர ண்டுவிதமாம் என்று பொருள்படுவதேயன்றி யுயர்ந்த விரண்டுஞானம் எனப்பொருள்படாது விபரீதப்பட்டழி யாது. நமது போலிப்புலவா அந்தோ! இப்படியு மவ்வி ஞானத்திற் றலைகொடுத்தலைந்தழிந்த லெனனேயோ ஆச்ச ரியம்! ஆச்சரியம்!! உயர்ந்தஞானம் இரண்டுவிதமாம் எ ன்பதற்கும், உண்மைஞானமெனப்படுவன விந்நான்கு மேயென்பதற்கு முரணாவதாழவுகளில்லை. அவ்வுயர்ந்தஞா னந்தானே நான்குவிதமாதலும் பெறப்பட்டன. இரண் டென்னு ஞானங்களுக்கும், நான்கென்னு ஞானங்களுக்குந் தனிமுதலாயநின்ற ஞானம் ஒன்றேயாகையால், "ஏகமா ஞ்சிவமெய்ஞ்ஞானமிசைந்தவா" என்றுகூறியபடிப் பெறப்பட் ட வவ்வொருஞானமே ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்று. இந் தவிசாரணையால், "சிவனடியேசிந்திக்கும்" என்னும்பாடலில் இரண்டுஞானமே முக்கியப்பொருளாதல் சிறக்குமென்ற தழிந்து ஒருஞானமே முக்கியப்பொருளாயிடுமென்ற ஸித் தாந்தம் நிலைபெறுகும். நம்மவர் கொள்கையின்படிக் கொ ண்டால், இனிக் "கேட்டலுடன்சிந்தித்தறெளிதனிட்டை, களத் தலெனவீரிரண்டாங்கிளக்கிஞானம்" என்றபாடலிலு மிருமு தன்ஞானங்களே முக்கியப்பொருளாமெனவும், கேட்டலா திக ளதனுட்படுபொருளாமெனவுஞ் சொல்லவேண்டிவ ரும். இப்படியே ஞானத்தைக்கூறு மெல்லாப்பாடல்களி லும் பொருள்சொல்லவரும். அங்ஙனஞ்சொல்லுமிடத்து, "முந்தியவொருமையாலே மொழிந்ததைக்கேட்டல், சிந்த னைசெய்தலுண்மை தெளிந்திடலதுதானாக, வந்தவாறெய்தனிட் டை மருவுதலென்றுநான்காம்." என வச்சிவப்பிரகாசத்திற்

பெறப்பட்ட பாடலுக்கு முட்படுபொருளாகவே பொருளமைக்கவேண்டும். அச்சிவப்பிரகாசத்தில் (உயர்ஞானம்) என்னும் பிரயோகத்தால் ஒருஞானத்தையும், (இரண்டாம்) என்னும் பிரயோகத்தா லிருஞானத்தையும், (பாசமாஞானத்தாலும்) என்ற பாடலான் மூன்றுஞானத்தையும், (முத்தியவொருமையாலே) என்றபாடலா னான்குஞானத்தையுஞ் சொல்லியிருத்தலால், அந்தந்தவாக்கியங்களுக் கவ்வவற்றுட் செம்பொருளாகத் துணியப்படுமவைகளையே முக்கியப்பொருளாகத் தழுவாம லவைகளை யுட்படுபொருளாகக் கூறத்துணிவது எம்மைக்காட்டிலுங் கற்றோர்மற்றொனைச் செருக்குமவாது அகந்தையின்பாலனெனக. உயர்ஞானம் என்றபகுதியி லொரேஞானமும், இரண்டாமென்றபகுதியி லிரண்டேஞானமும், பாசமாஞானத்தாலுமென்ற பகுதியின் மூன்றேஞானமும், முத்திய வொருமையாலே யென்றபகுதியி னான்கேஞானமுமே முக்கியப்பொருளாதல் சிறக்கும். இப்படியே கேட்டலுடன் சிந்தித்தலென்னும் பாடலிலும், சிவனடியேயென்னும் பாடலிலும் நான்கே ஞானம் எனனுந்துணிவே முக்கியப்பொருளாதல் சிறக்கும். இவைகளைச்சிதைத்து ஒன்றை யிரண்டாகவும், நான்கை யிரண்டாகவுங்கூறிக் குளறுபாடுபுரிவது ஸத்துக்கள் ஸதஸி னிலையுறுதல்பெறாது.

இனி, தமது இருமுதன்ஞானத்தில் கேட்டலாதிஞானங்களடங்குதலின், அவ்விருமுதன்ஞானமே முக்கியப்பொருளென்ற வமைதியையுங் கொஞ்சம்யோசிப்பாம். வேதத்துட்சிவாகமப்பொருளடங்குதலின் வேதமே சிவாகமத்தைக்காட்டிலுஞ் சிறந்தது எனல் யாங்ஙனம்? வேதஞ் சுருங்கியும், சிவாகமம்விரிந்தும் ஓரேபொருளை விளக்குகின்றன. சுருங்கிவிளக்கும் வேதத்தைக்காட்டிலும் விரிந்து விளக்குஞ் சிவாகமமேசிறப்புவகையானே சைவர்க்குச்சிறந்துவிளங்குகின்றமையால், இதற்கு மாறுபடுதல்கூடாது. இப்படியே இருஞானம், நான்குஞானம் என்பவைகளிற் பொருள்கொண்டு நான்குஞானத்துக்கே பிராசுரியங்கூறு

தலைமையுடைத்து. நான்குஞானத்துக்குமேல் ஓர்ஞானமு மில்லையாகையா லிந்தஞானமே யெல்லாஞானத்தினுஞ் சி றந்தஞானமாம். அதுபற்றியே சேக்கிழார்பெருமான் ஞா னங்களை நான்குமுறைகூறினர். இரண்டே யவர்கருத்தாயி ன், "உயர்ஞானமிரண்டாம்" என்று சிவப்பிரகாசத்திற் கூறி யவாறு அவரும் இரண்டேஞானம் எனக்கூறி முடித்திரு ப்பர். அல்லது, ஞானம்-ஞானம் எனத் தனித்தனிவிசே டணங்களோடு இரண்டுஞானமுடிவுகளையேனு மமைத்தி ருப்பர். இவைகளையோசிக்கிறபோது நம்மவர்கஷ்டப்பட டுச்சாதிக்கு மிருஞானந் தெருஞானமாய்விட்டது.

இவ்விழுநாவல ரிம்மட்டேயொழியாமல் "உயர்ஞான ம்" என்னும்பாடலுக்கும், "சிவனடியே" என்னும் பாடலுக் குந்தனித்தனிப்பொருள்விரித்தனர். அது "சிதம்பரத்தி லே யன்றணக்கதியலாய" என்றபடிச் சிவனுக்கேவெளிச்சம். கட் டியிருந்தகன்றை யவிழ்த்துவிட்டாற் கண்டபடிக் குதித் தோடித்தடுமாறி யிடர்ப்படுதல்போலத் தமக்கு இஷ்டவி காதஞ்செய்து கொள்ளாம லொருகைபார்த்து முடித்தார். அவ்வாபாஸங்களை யெழுதுவதென்றால பாரதமாகவிரியும். புத்திமான்களுக் கவற்றைப்பார்க்கும்போதே யவற்றிலு ள்ளவாபாஸந் தெரியும். அவற்றுளொன்றோன்று காட்டுகி ன்றோம். "தவமுதல்வர்ஸம்பந்தர்" என்பதற்கு "முற்றவவிசே டத்தானே திருஞானசம்பந்தராகிவிளங்குமஆளுடையபிள்ளையார்" என்று பொருள்விரித்தார். இதில் முன்னே என்று பொரு ளைத்தந்தபதம் யாது? முதல்வர் என்பதேபோலும். குல முதல்வர் என்புழி அவரெவ்வாறு பொருள்விரிப்பாரோ அறியேம். "அகரமுதலவெழுத்தெல்லாம்" என்பதுவே "தவ முதல்வர்"என்னுஞ் சேக்கிழார்வாக்கினுண்மையை இனிது விளக்கும். எழுத்துக்களையியக்கும் அகரத்தைப்போலத் தவத்தை யுயிர்களுக்கியக்குந் தலைவர் என்று பொருள்கூ றுதலே தகுதியுடைத்து. அகரம் தான் பயன்வேண்டாது எழுத்துக்களுக்குப் பயன்விளைத்துத் தான் முதலாய்நிற்ற ல்போல ஞானஸம்பந்தர் தாம் தவம்வேண்டாது உயிர்க

ளுக்குத் தவத்தையுயிர்க்குயிராயிருந் தியங்கப்பண்ணிப் பயன்விளைத்து முதல்வராய் விளங்குவரென்பது வெளிப் படை. இவ்வாறன்றி முன்னேதவங்கிடந்து பின்னர்ஞான ஸம்பந்தராயினரென்னு மபஸித்தாந்தம் அஸம்பாவிதமெ ன்க. அவர் முன்னேதவஞ்செய்தகதை யாண்டுங்கூறப்பட வில்லை. பாஞ்சாலி முன்னே நளாயினியாய்த் தவஞ்செ ய்தாளென்றபடி. அஃதொன்றுமில்லாமலே ஸ்ரீமுருகக் கடவுளவதாரமாயுள்ளவர் அவரென்று பலபிரபலபிரமா ணங்கள் பகராநிற்பனவற்றையெல்லாந்தள்ளி முன்னே த வஞ்செய்தவரெனச் சிவகோடியிற் சேர்த்துப்படித்தது சிவ நிந்தையிற்றலையாய பெரும்பாவமென்க. அவரோர்பசுவும், ஞானமடைந்தது அவரது ஸ்வப்பிரயோசனமுமாயின், ஞா னமடைந்தவநந்தர மவருக்குச் சிவம் ஸாக்ஷாத்கரிக்கவே ண்டும். அங்ஙனமின்றி ஞானத்துக்குப் பூர்வமே ஸாக்ஷாத் கரித்துவிட்டமையால், அவர்ஞானத்தாற் றமக்குப்பயன் வேண்டாமை யினிதுவெளிப்பட்டது. அதனு லவரடை ந்தஞானம் பரப்பிரயோஜனார்த்தமென்பது தானேபோத ரும். இத்தகைய வருண்ஞானவள்ளலை முற்றவத்தாற்சிற ந்த வோர்ஞானியென்று கூசாதுபேசுமவனை மூத்தாளது செல்வமக்களென்று வாழ்த்துதலே சிறக்கும்.

நமதுஈழநாவலர் இந்தத் தப்புஸித்தாந்தத்தைச் சாதிக்க வோரபரசுப்பிரமணியரைக் கண்டுபிடித்து வெளி க்குக்கொண்டுவந்தார். அப்படிக் கஷ்டப்பட்டுத்தேடியும் அந்தச்சுப்பிரமணியர் இவருக்குக் காலத்திலுதவாராயினர். அவ்வபரசுப்பிரமணியரிருப்பு இனித்தாந்தேடி வெளிப்ப டுத்தும் பிரமாணத்தாற் பெறப்படுவதாக வோர்போக்கு க்காட்டினமையால, அவ்வபரசுப்பிரமணியர் வேதத்திற் பெறப்பட்டு வெளிவருவாரோ? ஆகமத்திற்றான் பெறப்ப ட்டு வெளிவருவாரோ? அல்லது வேறு எந்தஅநாமத்து நூலிற் பெறப்பட்டு வெளிவருவாரோ தெரியகில்லேம். சீகாழிப்புராணத்தைப் பிரமாணமாக வெடுத்துக்காட்டி, அதிற்கூறிய சுப்பிரமணியருககே அபரநிலை கற்பித்தமையா

ல், அவ்வுண்மையை அந்தச்சீகாழிப்புராணம் ஏன் விதந்து
ரைத்திலதோ அறிகிலேம். அதிறபோந்தவர் அபரசுப்பிர
மணியாராயின், அவருக்கு முலைகொடுத்தசக்தி அபரசக்தி
யும், முலைகொடுப்பித்தசிவம் அபரசிவமுமாகமுடியும்.
எவ்வாறாயினுமாகுக, அவரைப் பசுவென்று கூறுதலுக்கு
இதுவும் விரோதமேயாகும். இனி யவ்வபரசுப்பிரமணி
யரைப் பசுவென்று சாதித்தலே நம்மவருக்குப் பொறுப்
பாகமுடிந்தது. அப்படி முடியும்போது அபரசக்தி, அபர
சிவமுதலாயினாரும் பசுக்களாயிடுவர். சபாசு நன்று! நன்
று!! இப்படியன்றோ சைவபரிபாலனஞ்செய்தல்வேண்டும்?
நமது ஈழக்கவிராயர் அபரசுப்பிரமணியர்தான் சீவைகதே
சியாகிய ஞானசம்பந்தராயினாரென்றும், அந்தஞானஸம்
பந்தர் யோநிவாய்ப்பட்டுப்பிறந்தாரென்றுங் கத்துகிறான
றோ? அவ்வபரசுப்பிரமணியரும் ஞானஸம்பந்தருமொரே
பொருளென்று கூறுவதன்முன்ன ரீண்டியாம்விளக்கு மிர
ண்டொருநியாயங்களை யினிது கவனிப்பாராக. பரசுப்பிர
மணியர் யோநிவாய்ப்பட்டுப்பிறவாதவரும், அபரசுப்பிர
மணிய ரங்ஙனம்பிறக்கின்றவருமென்பது பூர்வபட்சியார
து சித்தாந்தம். அபரசுப்பிரமணியர் யோநிவாய்ப்பட்டுப்
பிறக்கின்றவராகையால், அவர்தான் சம்பந்தராக மாத்ருக
ர்ப்பத்தையபேக்ஷித்துவந்தாரென்று மாரடித்துக்கொண்
டார். அவர்தேடிய சீகாழிப்புராணத்துள், சுப்பிரமணியர்
மாத்ருகர்ப்பத்தை யபேக்ஷியாமல் அயோநிஜராகவவதரி
த்து ஞானஸம்பந்தரெனச் சிறந்தாரென்று கூறப்பட்டி
ருக்கின்றது. அதனால், அப்புராணத்திற்பெறப்பட்ட சுப்
பிரமணியர் அபரசுப்பிரமணியரன்று, பரசுப்பிரமணியரெ
ன்றே நிர்மாணமாயிற்று. நமதீழக்கவிராய ரப்புராணத்தி
ற்றேடிய வபரசுப்பிரமணியரும், அவரதிலக்கணமு மந்த
ப்புராணத்தின்வழியாகவே பொய்ப்பட்டழிந்தமையால்
நிஷ்பிரயோஜநமாக வவர்பிரஸ்தாபித்த அபரசுப்பிரமணி
யர்விவகாரம் நிலைகுலைந்தது. ஞானஸம்பந்தர் யோநிவாய்
ப்பட்டுப்பிறந்தாரென்பதும் நாசமடைந்தது. அன்றியும்,
அவ்வபரசுப்பிரமணியர் மூலசுப்பிரமணியரன்று, ஒரு
அநாமத்துஸுப்பிரமணியரேயாகட்டும். அவ்வபரசுப்பிரம

ணியரோடுவந்த பதினாறாயிரந் திருக்கூட்டத்தவர்யாவர்? முதல்வராகிய சுப்பிரமணியர் அபரமாவரெனின், அவருக்கும், அவரோடு திருக்கைலையினின்றும்வந்த வவரது திருக்கூட்டத்துக்கும் பேதமென்னை? இத்திருக்கூட்டத்தவரில் அபரசுப்பிரமணிய ரெவ்வளவு அதிகப்பட்டவர்? அதற்கிலக்கணமென்னை? அபரசுப்பிரமணியருக்கும் அவர் திருக்கூட்டத்துக்கும், பரசுப்பிரமணியருக்கும் அவர்திருக்கூட்டத்துக்கும் முறையேயுள்ள அந்தராந்தரபேதம் என்னை? இவைகளைப்பிரமாணவாயிலாகவினிது பரிஷ்கரிப்பாராக.

இந்நாவல ரித்தோடேதொலையாமல் “முதல்வன் பிரளயாகலர்க்குப்போல நாற்றோளும், முக்கண்ணும்” எனையவுங்கொண்டு குருவாயநுக்ரகித்தது ஸம்பந்தரது பெருந்தவம் என்று மீண்டுங்கூறித்தொலைத்தார். அன்றியும், ‘‘சண்டிச் சகலருள்வைத்துச் சாமுசித்திகரென்று ஓதியருளிய ஆளுடையபிள்ளையார்’’ எனவொன்று மாறுகொளவுரைத்தார். சகலராகிய ஸம்பந்தருக்குச் சிவன் பிரளயாகலர்க்குப்போல இயற்கைவடிவங் கொண்டுவந்து அருளுதல் யாங்ஙனம்? தவமிகுதியினார்க்கு அவர் சகலராயினும் பிரளயாகலருக்குத் தோன்றியருளுவதுபோற் சிவம் அருளுமென்று எங்ஙாவது ஆகமத்திற் பிரமாணமுண்டா? கலியின்புதுமை அம்மம்ம மிகக்கொடிது! மூர்க்கரை மூர்க்கருகப்பரென்றபடியொன்றுகூடிய பாபகர்மஸமாஜத்தார் தம்முண்முரணி, அவருளொருவர் பதியாகிய நமது காழிநாதனை மூன்றாவதுவகுப்பிற்சேர்ந்த சாமுசித்தரென்றொழிந்தார். அவரது வக்கீலாகவெளிப்பட்ட விழுநாவலர் கொஞ்சந்தயைசெய்து மெல்லக்கொண்டுபோய்ப் பிரளயாகலராகிய இரண்டாவதுவகுப்பிற் சேர்த்தார். அப்படியு நிலைக்காது ஸாமுசித்தரென்று மீண்டும் புலம்புகிறார். பிரளயாகலருக்கு அநுக்ரகித்தல்போலச் சிவனவருக்கநுக்ரகித்தமையால், அவர் சகலரென்பதழிந்தது. ஸாமுசித்தருக்கநுக்ரகிப்பது போலாது பாலூட்டுதலின்வழியாக வநுக்ரகித்தலா லவர்

சகலருட் சாரூபித்தரென்பது மழிந்தது. அவரை விஞ்ஞானகலரெனவும், பிரளயாகலர்தானெனவும் ஒருவருஞ்சொல்லாமையால், அவ்விஷயத்திலெமக்கொரு சர்ச்சையுமில்லை. மூவிதவுயிர்வர்க்கத்துள்ளு மவர்சேராமையால், அவரைப் பதியென்றுகூறுவதே ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்று.

பெரியபுராணத்தில், "மணிவயிற்றி-லுருத்தெரியவரும் பெரும்பேறுலகுய்யவுளதாக" எனக் கூறப்பட்டமையால், அவர் மாதாவுதரத்திற றங்கினரெனின், அவரவ்வுதரத்தினின்றும் வெளிப்படாமையை "தவம்பெருக்குஞ்சண்பையிலே தாவில்சராசரங்களெல்லாஞ்-சிவம்பெருக்கும்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார்" என்னும்பகுதி நிலைபெறுவித்தலால் அவர் கூறியது பொய்யுரையென்க. அவர் மாதாவுதரத்திற் றங்கியிருந்து, அங்கேநின்றும் பிறந்ததுண்டெனின், "மணிவயிற்றி-லுளதாக" என்று கூறியதைத்தொடர்ந்தே ஸம்பந்தர் பிறந்தார் என்று சேக்கிழார் முடிப்பது அவருக்குக்கஷ்டமல்ல. "மணிவயிற்றில்" என்பதற்கும் "பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார்" என்பதற்குமிடையில் (சண்பையிலே) என்னுமோர்பெருந்தடைவந்து குறுக்கேதடுத்துவிட்டது. அவர் மணிவயிற்றிற் பிறக்கவில்லை, சண்பையிலவதரித்தார் என்று தெளிவாகவிளங்கலால், அவரை மாத்ருகர்ப்பஜரென்பார்கோள் மாசுபட்டழிந்தது. அன்றியும், "மணிவயிற்றில்" என்பதற்கும், "திருவவதாரஞ்செய்தார்" என்பதற்குந் தூராந்வயமும், "சண்பையிலே" என்பதற்கும், "திருவவதாரஞ்செய்தார்" என்பதற்கும் ஸமீபாந்வயமுமாதலு மறிந்தடங்குக. சண்பையிலே,பகவதியாரதுமணிவயிற்றிலே திருவவதாரஞ்செய்தார் என்றமைத்துக்கூறுவாமெனின், அது முதலிலேதானே (கரு) வது பாடலில் "அப்பதியில்" என்னும் பிரயோகத்தால் அமைந்துவிட்டது. (உ0) வது பாடலில் "மணிவயிற்றி-லுளதாக" என்னும் பிரயோகம் வந்திருக்கின்றது. (உகூ) வது பாடலில் "சண்பையிலே-திருவவதாரஞ்செய்தார்" என்னு முண்மைநிலை வெளிவந்தது. (கரு)

வது பாட்டில் சீகாழியும், (உ0) வது பாடலில், அச்சீகா
ழியில் விளங்கிய பகவதியார்கருப்பமெய்துதலுங் கூறிய
பின்னர், பிள்ளையார் அவதரித்தார் என்று இரண்டேவார்
த்தையின் முடிக்கக்கூடுமானதை "சண்பையிலே-தாவில்சரா
சரங்களெல்லாஞ் - சிவம்பெருக்கும்பிள்ளையார் திருவவதாரஞ்செய்
தார்" என்று அதிகமாகச் சொல்விரயஞ்செய்து சேக்கி
ழார் முடித்தது மிகையாகும். அன்றியும், முதலிலே யொ
ருசண்பை சொல்லியதுபோதாமல் மீண்டுமொருசண்பை
யை யோர்பொருத்தமுமின்றியவலப்பட்டழியவவர்கூறினு
ரென்னுங்குற்றமு மவர்தலைமேல்வந்தேறும். கூறியதுகூற
ன்முதலிய குற்றங்களாகியபேய்கள் தலைவிரித்தாடுங்கால்
நமது யாழ்ப்பாணத்துப்பூசாரி யாதுமந்திரங்கூறித் தணி
விப்பாரோ வறிகிலேம். இவ்வித அபாரதார்த்திதத்துக்கா
ளாகாமல் நமது போலிநாவலர் தப்பிப்பிழைப்பாராக.

நமது குட்டிநாவலர் ஞானசம்பந்தருக்கு மாத்ரு
கர்ப்பஸம்பந்தத்தைநாட்ட அதிககஷ்டமெடுத்துக்கொள்
ளுகிறார். அதனாலவரைப் பசுவென்று ஸ்தாபிக்கவும் ஆ
சைப்படுகிறார். அங்ஙனமாயின், அவருக்குத் "தாவில்சரா
சரங்களெல்லாஞ் - சிவம்பெருக்கும்" தன்மை எங்ஙனமுண்டா
கும்? சராசரங்களெனவே மூவகையுயிர்வர்க்கங்களும்ஆம்,
எல்லாம்எனவே யவ்வுயிர்வர்க்கங்களிலுள்ள பேதங்களும்
ஆம். இது பதியினது உண்மையிலக்கணம். இதற்குத்தப்
பாத்தஞ்செய்யவும் நமதுபண்டிதர் தவமுயன்றிருப்பாரோ
லும். சராசரங்களையியக்கிச் சிவத்வாபிவியக்திமையுண்டுப
ண்ணும் அருண்ஞானக்கொண்டலாகிய வெமதுஅப்பனை
நாக்கூசாமல் பசுவென்றெள்ளத்தலைப்பட்டவ ரிதுகாறும்
பட்டதன்றி இன்னும்பட்டுவாழ்வாராக. அன்றியும், ஆண்
டுச் "சிவம்பெருக்கும்பிள்ளையார்" என்றது ஆளுடையபிள்ளை
யாராகிய ஞானஸம்பந்தனையன்று, அவருக்கு மூலமாகிய
இளையபிள்ளையாரையேயாம். சராசரங்களாகிய வெல்லா
வுயிர்களுக்கும் பக்குவத்தை வருவித்துச் சிவாநுபவத்தை
யுயிர்க்குயிராயிருந்து விளைவிக்கின்பம்பயக்கும் இளைய

பிள்ளையார் அவதாரஞ்செய்தருளினார் என்று சொழிமாங்
கியத்துக்கு விரோதமின்றிச சேக்கிழார்பெருமான் கூறி
னமையால், அவர் பரமபதியென்றுந்துணிபு பசுமரத்தா
ணியறைந்தாற்போல நாட்டப்பட்டது. சராசரங்களாகிய
வெல்லாவுயிர்களுக்கு மெம்பெருக்குந்தலைமை யவ்வுயிர்
வர்க்கத்து ளொருவர்சகத்திற்சேர்ந்து வினைப்போகத்திற்ப
ட்டுழலு மேகதேசவுயிருக்கலமையுமெனல் சிரிப்பை விளைத்
து, அங்ஙனங்கூறுவாரை முட்டாள்களுக்கெல்லாஞ் சட்
டாம்பிள்ளையென்றழைப்பதொழிய வேறொன்றுஞ்சொல்
லக்கூடாமையால், நமது போலிநாவலர் அதற்கஞ்சியொது
ங்கிப்போவாராக. இவ்வாறுபிரபலமாகிய நியாயங்களும், பிர
மாணங்களு நிலைபெற்றிருப்பனவற்றை மறைக்கமுயலுதல்
யாங்ஙனம்? கந்தரந்தாதி, திருப்புகழ், திருச்செந்தூரகவல்,
சந்நிதிமுறைமுதலிய வுண்மைநூல்களிலெல்லாம் இவ்வி
ஷயம பரக்கப்பிரகாசம்பண்ணப்பட்டிருத்தலையுங்கவனியா
து ஞானசம்பந்தனைப் பிறந்தார் எனவும், பசுவெனவும்
வாய்கூசாதுபேசிப்பேசியும், கைகூசாது எழுதியெழுதுங் கா
லம்போக்கும் நமது ஏழைநாவலருக்கு வைவஸ்வதனொருன்
கூலிகொடுக்கவேண்டியது. இனியாவது அடங்கியொடுங்கு
வாராக. இவ்வளவிலமையாது சிவஞானபோதசிற்றுரை
யில், சிவஞானமுனிவர் "அருளுடையபிள்ளையார் முதலாயினார்க
குச் தவமின்றிய ஞானம நிகழ்ந்தவாறென்னையென்றுங்கடாவை
யெழுத்துப்பகு, மேற்செய்தூழியென வீண்டிம லியறுத்தார்" எனக்
கூறியிருப்பதை நமது குஞ்சநாவலர் எடுத்து ஆண்டுகொ
ண்டனர். இது இத்தகைத்தினதென்று முண்மையை ஞான
பேதநவெளியில் பிரகாசப்படுத்தினோமாகையால், நமது
போலிநாவலர் கான்றசோற்றை மீண்டுங்கௌவி நுகர்ந்த
வராயினர். இங்ஙனே மின்னுமதனைவிரிக்கமனமில்லை. இருளா
லே கதிரோனைமறைக்க வேண்டிப்போடுவதுபோல், தமது
பொய்யாலே யெமது ஞானஸம்பந்தனதுமெய்யைத் தாழ்
த்தப்பார்த்தால் அது எங்ஙனங்கூடும்? ஞானஸம்பந்தர்
பிறந்தாரென்றுன்மாத்திரங் குமாரக்கடவுளுக்குப் பாரம்
யம் நசிக்கும். அங்ஙனம்பிறந்துழன்றதுபொய்யெனத் தீர்

மானிக்கப்பட்டபின்னரு மேன் வினைவதிக்குள்ளாகவேண்டும்? அவர் பிறந்ததில்லையெனப்போந்த நியாயத்தையும் ஏனழிக்க முத்துலைபோட்டுவருந்தவேண்டும்? ஆன்றோர் வழக்கத்தையாசரித்து வாழாமலும் ஏனழியவேண்டும்? இவ்வளவு நியாயங்களையுந்தள்ளி ஞானசம்பந்தரை இளையபிள்ளையாரென்பது உபசாரமென்று அவர்கூறுகின்றாராம். இவ்வாறு அவர் தமதுநூலிற்கூறவில்லை. அவராபாஸத்தைச சோணைமாரியாகக்கொட்டும் அவரது பிரஸங்கத்தில் பிரஸ்தாபித்தாராம். இந்தப்பிழைநாவலர் சொற்றதுகொண்டே யஃதுபசாரமாய்விடமாட்டாது. அருணகிரிநாதர் முதலியவருளாளர்களானையிட்டுக்கூறியவுண்மையை அற்பர்களுபசாரமென்ற லஃதங்ஙனமாய்விடுமா? அற்பரது போதமெம்பெரியாரதுகாலளவினின்று மங்கியதென்க. அறுபத்துமூன்றுபேரடியார்களு ளிவரைமாத்திரம் சிவஸ்ரூபவென்றுபசரித்தற்கேதுவென்னை? இனிச் சுப்பிரமணியரைக் கடவுளென்று வேதங்கூறுவதும் ஏனுபசாரமாகாது? சிவனைக்கடவுளென்பது உபசாரம் எனப் பாஞ்சராத்திரிகள்சொல்வதும் ஏன் மெய்யாகாது! சம்பந்தரைக் கடவுளல்லவென்று சாதிக்கத்தொடங்கிச் சிவபெருமானீறாக யாவருக்குந் தாம்பூலம்பிடிக்க நமது நவீனநாவலர் இடஞ்செய்தது அவரது பூர்வபுண்ணியவிசேடந்தான்போலும். இன்னும் விரிக்கிற்பெருகும்.

ஆயின், பெரியபுராணத்தில் "மணிவயிற்றி-லுருத்தெரியவரும்பெரும்பேறுலகுய்யவுளதாக" எனமுடிவுகாணுகின்ற பகவதியாரதுகருப்பம் எவ்வாறுயிற்றெனின், அதனை விடுக்குதும். சிவனுமையைநீங்கி யோகிருந்தகாலையி லுயிர்களுக்குப் போகம்புலர்ந்தவாறென்னை? சிவன் பாண்டியன் கைப்பிரம்பாலடியுண்டபோது எல்லாவுயிர்களுமடியுண்டவாறென்னை? சிவனுமையைவிட்டு நீங்கினாரேயன்றி யுயிர்கள் தங்களுடைய மனைவியரைவிட்டு நீங்கினாரில்லை. சிவனைப்பாண்டியனடித்தானேயன்றி யுலகிலுள்ளவுயிர்களையெல்லா மவனடிக்கவில்லை. இங்ஙனமாக, உயிர்களுக்குப்போ

கம்புலர்ந்தும், உயிர்கள் பிரம்படியுண்டும் வருந்தியதெற்
றுக்கு? இவற்றினுண்மையை யோசிக்கின், பகவதியாரது
கருப்பத்தினின்று மெமதுகாழிப்பெருமான் பிறவாதஸம்ப
ந்தம் வியக்தமாகும். எங்ஙனமெனின், சிவன் றனதுசத்தி
யைவிட்டுநீங்கியதற்கு உயிர்கள்யாவுந் தத்தம்பேடுகளைநீங்
கியும், சிவன் றம்முடையதிருமேனியிற் பிரம்படிதாங்கிய
தற்கு உலகிலுள்ள சராசரங்களெல்லா மடிபட்டு மியங்
கியவாறு நமது பொருளாளர் திருவவதாரஞ்செய்தற்கு
நிமித்தமாகப் பகவதியார் கருப்பமெய்தினரென்க. ஆயின்,
அவரது அவதாரநிமித்தமாக வுலகில் யாவருமன்றோ கருப்
பமெய்தவேண்டுமெனின், அவரது அவதாரத்தை யுத்தே
சித்துத் தவங்கிடந்தவர் பகவதியாரேயாகலா னேனையோ
ருக் கதுசிறவாமை யுசிதமாயிற்றென்க. ஆயினந்தக்கருப்ப
மெப்படியாயிற்று எனின், "மாதவம்புரிவோன்முன்னிளங்கதி
ர்போன் மதலையாய்வந்தனன்காதன்" என ஸ்வாமிஅயோநிஜ
ராக வவதரித்தபோது நிவிர்த்தியடைந்ததென்பதேயாம்.
நிவிர்த்தியடைந்ததென்பது அந்தக்கருப்பம் மறைந்துபோ
யிற்றென்பதேயாம். பகவதியாரதுகருப்பம் மறைந்தவிடத்து
த் தாம்முன்னர்த்தாங்கியிருந்த கருப்பத்தின்பிரயோஜனம்
"நீங்கருந்தவத்தோன்மகவுகள்வந்து-பகவதியெனும்பேர்மனைவி
யாலெடுத்தினிதளிப்ப-புதல்வனைக்கொடுமனைபுகுந்தாள்" எனவெ
ளிப்பட்டவாறறிக. இப்படிக்கன்றி வேறுவிதத்தாற் சாதித்
து ஞானசம்பந்தருக்குக் காப்பதோஷந்தேடுவார்க்கு எம்
மாற்கூலிகொடுக்கமுடியாது. "இந்திரசாலவித்தைகாட்டுவானெ
ன்னத்தன்பாற், சேர்தழனூட்டமீன்றசெல்வனைக்கருப்பமெய்தா, தந்
தமிழுயிருஞாலமனைத்தையுமீன்றதாயாஞ், சுந்தரவல்லிதன்பாற்
றோன்றுமாறுள்ளஞ்செய்தான்" என்றதிருவிளையாடற்புராண
ஸந்தர்ப்பத்தையு மிதற்குவமித்தறிக. இதனை ஆசாரியபிர
பாவத்தி னினிதுவிளங்குமாறு உபமானத்தாலறிவித்திருக்
கின்றமையா லாண்டுக்கண்டுகொள்க.

இனி, ஞானஸம்பந்தர் கடவுளவதாரமாயின், சந்தான
குரவராகியஉமாபதிசிவம் "தில்லைவாழந்தணரேமுதலாகச் சீர்
படைத்த - தொல்லையதாந்திருத்தொண்டத்தொகையடியார்பதம்

போற்றி" என அவரையும் அடியவர்வர்க்கத்துட்சேர்த்துப்
படித்தவாறென்னையெனின், நன்றுவினவினாய். "பூழியர்
கோன்வெப்பொழித்த புகலியர்கோன்கழல்போற்றி" என்னும்
பாடலான் ஞானஸம்பந்தரைத் தனிமுதலாகப் பிரித்து
ஏனையாசாரியர்களுடன் றுதித்தாராகலின் அவரும், அவ்
வேனையாசாரியர்களும் (தொகையடியார்) என்னும் பிரயோ
கத்திற் பொருளாகநின்றிலரென்க. அதவா வவர்பொரு
ளாகநிற்பினுங் குறைகூறப்படாரென்க. வேதம் சிவனைக்
கடவுளென்று கூறுகின்றது. அச்சிவன் ஓர் பெண்ணுக்கு
மருத்துவம்பார்க்க வப்பெண்ணினது தாயைப்போலத் தி
ருவுருக்கொண்டு தாயுமானவர் என்னுந் திருப்பெயரையுந்
தாங்கிப் பிரஸித்தியடைந்தனர். பன்றிக்குட்டிகளுக்கு மு
லைகொடுத்துபகரிக்கப் பெண்பன்றியாகத்திருவுருக்கொண்
டுவெளிவந்தனர். இவைகளா லவரதுகடவுட்டன்மைகுன்
றிலது. ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியாகத் திருவுருக்கொண்டு திரு
க்கையில் ஜபமாலிகைதாங்கித் தவவேடத்தாற்சிறந்து சிவ
னடியார்வேடமே பொலிவெய்த விளங்கினர். அன்றி
யும் அவர் இயற்பகையாரிடத்தும், அமர்நீதியாரிடத்தும்,
கௌரித்தாயினிடத்தும் இன்னுமநேகரிடத்தும் அடியார்
வேடந்தாங்கிச்சென்று அருள்புரிந்தனர். கடவுளடியவ
ராகலாமா என்று கடாவும்பூர்வபட்சிக ளிவைகளைநன்கு
யோசிக்கவேண்டியது. இந்தப்பரியாலோசனையால், முரு
கக்கடவுள் எப்படி ஞானஸம்பந்தராகலாம் ? அவரடிய
வராகையாலென்று கடாவுவார்கோள் நிஷ்பலமாயிற்று.
எம்பெருமான் அடியவர்வேடந் தாங்கியிருந்தகாலத்
து மவரதுதெய்வத்தன்மை மறைந்ததில்லை. இதனைக்
கூர்ந்து யோசிப்பாராக. இங்ஙனநிற்க, அரசன்புகழை
யெடுத்துவிரித்து அதனை மந்திரிக்குரியதாக வுபசரித்து
அம்மந்திரியைத் துதிக்கலாம். மந்திரியினது புகழையெ
டுத்துவிரித்து அதனை அரசனுக்குரியதாக வுபசரித்து
அவ்வரசனைத் துதிக்கலாமா ? தாழ்ந்தவனையுயர்ந்தவனாக
வுபசரித்துத்துதிக்கலாம். உயர்ந்தவனைத் தாழ்ந்தவனாகவு
பசரித்துத் துதிக்கலாமா ? சுப்பிரமணியருயர்ந்தவரும்,

ஞானஸம்பந்தர் தாழ்ந்தவராயிருப்பதனால், உயர்ந்தவராகிய சுப்பிரமணியர் புகழையெடுத்து விரித்து, அதனைத் தாழ்ந்தவராகிய சம்பந்தருக்கு உபசாரமாகவேற்றித் துதிக்கலாம். அப்படியன்றித் தாழ்ந்தவராகிய ஞானஸம்பந்தர்புகழையெடுத்து விரித்து, உயர்ந்தவராகிய சுப்பிரமணியருக்கு அதனை யுபசாரமாகவேற்றித்துதித்தல் யாங்ஙனம்? அங்ஙனஞ்செய்தல் சுப்பிரமணியரைத் தூஷிப்பதாகவன்றோ முடியும்? அங்ஙனஞ்செய்தவர்கள் அருணகிரிநாதர்முதலிய சிவாநுபூதிமான்களாகையால், அவர்களையே யிவ்விப்பூர்வபட்சிகள் தூஷிக்கவேண்டியது. ஞானஸம்பந்தரை முருகக்கடவுளென்றுகூறினால், அது ஞானஸம்பந்தருக்கு உபசாரமாகலாம். முருகக்கடவுளை ஞானஸம்பந்தரென்றுகூறினால், அது முருகக்கடவுளுக்கு உபசாரமாதல் யாங்ஙனம்? ஞானஸம்பந்தரை முருகக்கடவுளென்று பிரதிபாதிக்குநூல்கள் முருகக்கடவுள்பரமாகவெழுந்த நூல்களேயாகையால், ஞானஸம்பந்தர் வைபவமத்தனையும் அம்முருகக்கடவுளது அவதாரவிசேடத்தானியைந்த வருள்விலாஸமென்றே நிச்சயமாயிற்று. இதனால், முருகக்கடவுளே ஞானஸம்பந்தரென்பதும், ஞானஸம்பந்தரே முருகக்கடவுளென்பதும் உபசாரமுமன்று, பாவனையுமன்று, இருமுதல்களு மொன்றேயென்னுந்துணிபு கண்டறிக. எலும்பைப்பெண்ணாக்குதல், சமணரைக்கழுவேற்றுதல், காழியிலேவந்துகணக்கிலாச்சிவரை நீடூழியின் பத்துய்த்தல் முதலிய அரியகாரியங்கள் பதியிலக்கணமாமேயன்றிப் பசுவிலக்கணமாகாது. ஞானஸம்பந்தர் பசுத்வமெய்திய வோரடியவராயின், அவர் சமணரைக்கழுவேற்றியதுகுற்றமாகி அருளில்லாதவர் என நிந்தையேற்றிழிந்திடுவர். அவர் பதியாயினமையால், அவரதுபஞ்சகிருத்தியங்களி லதுஸம்ஹாரமாகி அவரது ஸ்வதந்திரத்தை நிலைப்படுத்திவிட்டது. அவர் பரமபதியும், அவரில்வேறாகாத திருக்குமாரருமென்பது பலபடியால் யாம்நிரூபித்துக்காட்டினோமாயினும், வேறுநியாயத்தாலும் அவரதுண்மையைப் பிரகாசப்படுத்துவாம்.

அவருடைய திருப்பதிகமொன்றில், "பாலனாயதொண்டுசெய்து பண்டுமின் றாளிணையே" எனக்கூறியருளினார். இதில், பூர்வமும்இப்போதுந் தேவரீருக்குப் பாலனாயிருந்தே தொண்டுபுரிகின்றேன் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டவதாரங்களினுங் குமாரத்தன்மைகுன்றாது நிலைபெறுகிற்று. மூலமூர்த்தியாகிய சுப்பிரமணியர் சிவகுமாரரேயாயினும், அவருஞ் சிவனை வழிபடுகின்றவரேயாவர். அங்ஙனம் வழிபடுந்தன்மையால், சிவனடியாராகவு மவர் சிறந்திருக்கின்றனர். திருச்செய்ஞலூர்முதலிய க்ஷேத்திரங்களில் அவர் சிவாராதனம்புரிந்ததுஞ் சான்றாம். அன்றியும், "திருமாலிந்திரன்பிரம னுபமனியன்றபனனந்திசெய்வோனாதி, தருமமுதற்குரவருக்குந் தனதருளாலாசிரியத்தன்மைநல்கி, வருமெவர்க்குமுதற்குருவாய்" எனச் சிவஞானமுனிவர் சிவதத்வவிவேகமொழிபெயர்ப்பிற் கூறினாராகையால், இதிற்போந்த குமாரக்கடவுள் ஆசிரியக்கோலங்கொண்டவோர் சிவனடியாராதலிழுக்காது. அவரடியவராதல்கொண்டு சிவகுமாரராகிய பதிப்பொருளாதலு மிழுக்காது. இன்னுமவர்சிவகுமாரரென்பது "தொன்ஞானசம்பந்தர்க் - கந்தம்பதினாறு" என்னுமவரது ஆயுள்வரையறையானு மினிதுவிளங்கும். பால்ய-கௌமார-யௌவன-வயோதிகங்களாகிய பருவங்களில் பாலப்பருவத்துக்கு வயசுபதினாறு என முடிவாகின்றமையால், அந்தப்பாலப்பருவத்தை யதிக்கிரமியாமல் தாம் சிவனது பாலரென்பதை நிலைபெறச்செய்தனர். பதினாறுக்குமேலிட்டால் அவருக்குப் பாலரென்னும் பேர்நழுவும். அவர் சிவனது பாலராயிருப்பது யாண்டும் நழுவவேலாதாகையால், அதனைநிலைப்பிக்கும் பதினாறுவயசேதாங்கித் திருமேனியைத் தமததிஷ்டானத்தி லொன்றுபடுத்திச் சிவமேயாயொளிவிட்டுப் பிறங்கினர். இவ்வுண்மையுணர்ந்தபின்னரு மெம்பெருந்தகைமாட்டுத் தூஷணங்கூறுதல் பாவிகளுக்கேசிறக்கும்.

இங்ஙனமிற்க, திருவிளையாடற்புராணத்தில், ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானது திருவிளையாடல்களறுபத்துநான்

கனுட் சமணரைக்கழுவேற்றியது ஓர் திருவிளையாடல். இத்திருவிளையாடல்புரிந்தவர் ஞானஸம்பந்தரேயன்றிச் சொக்கலிங்கப்பெருமானன்று. சொக்கலிங்கப்பெருமான் புரியாததும், ஞானஸம்பந்தர் புரிந்ததுமாகிய திருவிளையாடலைச் சொக்கலிங்கத்தினது திருவிளையாடல் என்று உண்மைநூல்கள் கூறுவது என்னை? ஞானஸம்பந்தர் சொக்கலிங்கத்தில் வேறுபொருளல்லாததுகொண்டேயன்றோ ஞானஸம்பந்தர்செய்ததைச சொக்கலிங்கம்செய்ததாக உலகம்ஒப்பியிருக்கின்றது? இந்தரஹஸ்யமுணர்ந்தவர்கள் சொக்கலிங்கம்வேறு,ஞானசம்பந்தர்வேறு என்று எங்ஙனஞ்சொல்லத்துணிவார்கள்? அப்படிசசொல்லத்துணிவாராயின், ஞானஸம்பந்தர்செய்த திருவிளையாடலைச் சிவன்செய்ததிருவிளையாடல் என்று உண்மைநூல்கள் கூறுவதற்கு என்னகதிதேடுவார்கள்? சிவபெருமான்செய்த திருவிளையாடலை ஞானஸம்பந்தர்மேலேற்றிக்கூறின், அதுஞானஸம்பந்தரைக் கௌரவித்தற் குபசாரமாகக்கூறியதென்னலாம். அங்ஙனமின்றி,ஞானஸம்பந்தர்செய்த திருவிளையாடலைச் சிவபெருமான்மேலேற்றிக்கூறினமையால், அது சிவபெருமானைக் கௌரவித்தற்குபசாரமாகக்கூறியதெனல் கூடாது. இதனால், சிவபெருமானும், அவரில்வேறாகாத ஞானஸம்பந்தர்பெருமானும் பிரித்தறியக்கூடாத வொரு முதலென்பதேஸித்தம். இப்படியே பாண்டியன்சுரந்தீர்த்த திருவிளையாடலினுங்கண்டுகொள்க. இன்னும்எம்பெருந்தகையினதுபெருமையைப்பேச வெமக்காசையதிகரித்தலால், எமதுகையிலேந்திய இறகு சலியாமலோடுகின்றது. அதனையினிதுகவனித்து நமது குட்டிநாவலர் தமதுசெருக்கடங்கிவாழ்வாராக.

எங்கள்காழிநாதன்பெருமை யாம்விரித்துரைக்குமளவிலடங்குமதோ? "சகலமதங்களையெல்லாமுணர்ந்ததவமுனிவோர், புகலுமிலக்கமெண்ணாயிரம்பேரைப்பொருகழுவி, லிகலுறவைத்தும்வருமேதமொன்றின்றியேயிருந்தான், திகழுறும்போரியன்சமபந்தநாமஞ் சிறந்துகொண்டே" என்னும்பாடலின்கருத்தை ஸாதுக்கள் விசாரித்தறிவாராக. தாயைக்கொன்றபாவ

ம் பரசுராமனுக்கும், இராவணனைக்கொன்றபாவம் ரகுவீ
ரனுக்கும்நேர்ந்தபடி எண்ணாயிரமுனிவரைக்கொன்றபாவ
ம் எங்கள்கவுணியர்தீபத்துக்கு நேரிடாததுஎன்னை? அவ்
வெம்பெருந்தகை மெய்யானதெய்வமாதல்பற்றியன்றோ
வவரை யோர்தோஷமுமணுகிற்றிலது? இவ்வருமையை
நோக்கியபின்னரு மவ்வமலப்பிரான்மீது ஓர்தூஷணங்கூற
வுண்மையானசிவனடியார்களுக்கு எண்ணமுண்டாகுமா?
இதனை நம்மவர்கூர்ந்துயோசித்து அவர்பதியென்றுதெளி
ந்து சுகிப்பாராக.

இம்மட்டோ, சிவபெருமானை முத்திநாதன் என்று வே
தங்கள்கூறியது அவரைக்காட்டிலு மதனையுயிர்களுக்குத்த
ரவல்லவர் வேறுயாருமில்லாமையால். அச்சிவபெருமான்
எண்ணிறந்தகற்பங்களைக் கடந்துவிளங்கு மிதுகாறு மெத்
தனைபேர்க்கு முத்திகொடுத்தருளினார்? நூல்களின்வழிவி
சாரிக்கின், இத்தனைபேர் என்று கணக்கிலகப்பட்டதாயி
ல்லை. அற்பத்தொகையிலளவிடத்தக்க சிலரைமுத்தியில்
விட்டதுகொண்டே அவருக்கு முத்திநாதன்என்னும்பேர்
சிறவாது. ஆகலின், வேதமவ்வாறுகூறிய துபசாரமோவெ
னின், அற்றன்று; அவர் ஸ்ரீஜ்ஞானசம்பந்தராகத்திருவவ
தாரஞ்செய்து "காழியிலேவந்துகணக்கிலாசீவரை, நீடேழியின்ப
த்துய்த்தவொருவனே" என்று மேலோர்கூறியபடியெண்ணி
றந்தவுயிர்களுக்கு முத்தியைக்கொடுத்தருளினாராகலின்,
அவர்முத்திநாதரென்பது சத்தியமே. மோக்ஷகர்த்ருத்வ
மாகிய வத்தலைமைத்தன்மை ஸ்ரீஞானசம்பந்தரிடத்திற்
பரிவஸாநமுறலால், பரசிவப்பொருளும், ஞானசம்பந்
தருமொரேபொருளென்றறிந்து அவிரோதத்தைத்தெளி
கின்புறுவாராக. "கட்டைமுட்டமூவுதா ணெட்டிதழுநீத்தசெங்
கமலநானமுகவெகினமுங், கவுத்துவமணிப்பணியொ டம்போரு
காடவி கலிதபச்சைப்பனறியு, மடலுவுசீர்பாத மின்றளவுகண்
டிலா வானவனுமோரொருவனா, வழிவருஞ்சரிதாதி வருவித்து
வீடுதரும் வனைதமிழ்க்காழிமேவி, யெட்டுனையுமறியாரு மணந்தசீவ
ராவதுவையென்றுபெயரிட்டணழுத்தங், கிரும்புனைடநீரிற திரும்
பாதவீடுதரு மினியகவுணியர்விளக்கே" என்றுமான்றோர்கரு

த்து மெமதுகருத்திலிசைந்து காழிப்பெருந்தகையினது கடவுட்டன்மையை நிலைபெறச்செய்ததமையால், நமதுநண்பர் சித்தஸமாதானத்துடன் ஏகாந்தஸ்தானத்திலிருந்து இவ்வுண்மையைத்தெளிந்து குணப்படுவாராக. இந்தப் பாடலில் குணமூர்த்திகண்மூவரையும், துரியமூர்த்தியையுஞ்சொல்லி, நாலாவதாகிய வத்துரியப்பொருள் ஸ்ரீஜ்ஞானஸம்பந்தப்பெருமானேயென்று சாதித்தருளினர். அவர் துரியப்பொருளாகாதபோது விஷ்ணுவுக்கு ஸாரூப்பியங் கொடுத்தன்முதலியமஹிமை யவர்பாற்சிறவாது. இத்தகைய பலவேதுக்களால், ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தபெருமான் பரமபதியாதல் இனிது சாதிக்கபபட்டது. இம்மட்டோ, Oriental historical manuscripts in the tamil language translated with annotations by William Taylor, Missionary. என்றுபதித்துள்ள வோர்நூலினிரண்டாவது வால்யத்தில் (When the king was suffering greatly from the disorder, the God Soobramanya assumed the form of Summuntamurti, who came with a sacred cortege; and a severe discussion took place between Summantar and the Samanar &c) என்று அந்தநூலாசிரியராகிய பாதிரியார் எங்கள் ஞானஸம்பந்தன்புகழை விளக்கியிருக்கிறார். அவருக்குள்ளவிசாரணையும், புண்ணியமுங்கூட நமது ஈழநாவலருக்கில்லாமற்போயிற்றல்லவா? நமது ஏழைநாவலருக்கு எங்களுபதேசத்தில் விசுவாசமுண்டாகாவிடினும், பாதிரியாரது உபதேசத்திலாவது விசுவாசமுண்டாகுமென்று ஈண்டிதனை யெடுத்தெழுதலாயினோம். ஏனெனின், யாழ்ப்பாணிகள் பாதிரிமாரிடத்தி லதிகமன்புபூண்டு கொத்தடிமையாயக் கிடக்கின்றவர்களாகையால், அப்பாதிரிமார்போத மவர்களுக்குமிகப்பூஜ்யமாதலினென்க. புறசசமயிகளாகிய பாதிரிமாரது விசாரணையிலும்வரத்தக்க பிரஸித்தியானவிஷயமாக ஞானஸம்பந்தர் வைபவஞ்சிறக்குமாறால, அதனை நமதுசைவப்போலியார் விசாரியாமையாலோ, விசாரித்துந் தமது அறியாமையினாலோ, அகந்தையினாலோ தபபுந்தாறுமாகக் குளறிவழிதல் அவரது பாவமேயாம். இனியேனுந் தவஞ்செய்து புண்ணியம்வளர்ந்தோங்கப்பெறுவாராக. இதுநிற்க.

நமது பேதைநாவலர் எங்கள் ஞானஸம்பந்தரை மூ ருக்கடவுளல்லவென்று பரிஷ்காரமாயச் சொல்லித் தொலைக்காமல், அவரை அபாசுபபிரமணியர் என்று கொஞ்சங் குறைவுறக்கூறிவருகிறார். இதனாலவர் நமது மதத்தை மறுக்கவேண்டுமென் றெண்ணங்கொள்வதேயொழிய அடியோடே மறுத்தபாடில்லை. இப்படியே ஞானம் நான்கென்று மெமது ஸித்தாந்தத்தை மறுக்கவேண்டுமென் றகந்தையா லெண்ணங்கொள்வதேயன்றி அதையும் அடியோடேமறுத்தபாடில்லை. யாம் நாலுஞானங்காட்டிய சேக்கிழார்சுவாமிகள்பாடலிற் றூமமவைகளை யுட்படுபொருளாக வங்கீகரித்திருக்கிறார். இவரது நிலைமை யிப்படிமுடியுமானால் இவரது அறியாமையையும், பொறாமையையுநாடி யாந்துக்கிப்பதன்றி வேறு என்செய்வது? பரிதாபம்! பரிதாபம்!" அவதானி என்னும்பெயரைக் களவாடி லஜ்ஜைகெட்டுத்திரியும்பாவிசாகொண்ட (இரு ஞானம் = இரண்டுஞானம்) என்பதைச் செந்நாதையர் (இரு ஞானம் = பரஞானம்) எனப்பொருள்கூறி யபபோஸியாவதாரிணைத் தெருவிலவிட்டார். இனி ஐயரவர்கள் "சிவனேயே" என்னும்பாடலில் நாலுஞானங்கிடையாது என்று சாதித்ததைமறுத்து, அவை யுட்படுபொருளாகவுண்டென்றுகூறி நமது நாநாவலரவரையுந் தெருவிலவிடுத்தார். யாம் நடுவுநிலைமையாக நோக்குமிடத்து நமது நாநாவலரைக்காட்டிலும் ஐயரவர்களே கொஞ்சமபுத்திசாலியும், ஒருவாறு நியாயமேற்பவருமென்று நிச்சயிக்கின்றோம். நவீனநாவலர் விருதுமபரந சாட்டி ஆடாகளைமயக்கும் வஞ்சகத்தின்மிகுதியுள்ளார். இவரது ஆடம்பரம் இலக்கணத்திற் றுமபெரும்புலி என்பதேயாம். இவரது இலக்கணவன்மையை மேலிடத்திற் சிறிதுகாட்டிப் பரிகசித்திருக்கின்றோமாயினும், அதனையின்னும் பஹுளமாகவிரித்து விவகரித்து அவரது யோக்யதை யாவருக்குமவிளங்குமாறு இனிதுபிரகாசப்படுத்துவாம்.

எங்ஙனமெனின், நமது போலிநாவலர் "சிவனடியே" என்னும்பாடலை கொண்டுகூட்டுப்பொருட்குப, நிரனிறைப்பொருட்கு மிடனுய்கின்றதென முன்னாகக்கூறி, அதற்குத் தமது சிற்றறிவிறகியைந்தபடி விபரீதவிலக்கணங் கற்பித்

துப் பின்னர், கொண்டுகூட்டாகக்கொள்வது தக்கதன்று, நிரனிறையாகக்கொள்வதே தகுதியுடைத்து என்று தம்மைத்தாமே மறுத்துக்கொண்டனர். இது என்போலுமெனின், ஒருவன் தன்னுடைய வரியமனையாட்டியை முதல் இருவருக்குரியவளாக்கிப் பின்னரொருவற்கே யுரியவளென வுறுவழக்கிடுதல்போலும். நிரனிறையென்றொரு மஃதிப் பகுதிற்றென்று கூறுதொழிந்தார். என்செய்வார் பாவம்! இரண்டுவிதியை யொன்றற்குரித்தாகச்சொல்லிப் பின் மாறுபடுமாண்புடையா ரந்நிரனிறைபொருள்கோளிலக்கணத்தையு மதன்வகையையு மெங்ஙனமுய்த்துணரவல்லுநராவர்? இனி யச்செய்யுளிற்போந்தபொருள்கோள் யாற்றுநீர்ப்பொருள்கோளிற் செவ்வனமைந்துகிடக்கவு மதனைக்கூர்ந்துணராது உறுநோக்குடைத்தா யாழ்ந்துபொருள்கிடக்க நிரனிறையாற்கொள்ளலே தகுதியுடைத்தாமெனத் தருக்குற்றழிந்தனர். இவர் சிறப்பாகக்கொண்ட வின் நிரனிறையைக்காட்டிலு மதிகமுய்த்துணர்ந்து சிறக்கப் பொருள்கொள்ளு மெதிர்நிரனிறைமுதலிய பொருள்கோளுளவாகலினானும், அவற்றிற்கு மச்செய்யுளிடங்கொடுத்தலானும், அவ்வாறுகொண்டுகூறுதல் சிறப்பினுஞ் சிறப்பாமாகலானும் நமதுபண்டிதர் தாமகொண்டதே சிறந்ததெனச்சாதித்துச் சோர்தல் பெருந்துக்கமென்க. அன்றியும், இவர்கொண்ட பொருள்கோளே யேனையபொருள்கோளெல்லாவற்றினுஞ் சிறந்ததென்பதற்குப் பிரமாணம் எவ்விலக்கணநூலிலேனுங் காட்டுவாரா? அல்லது "நிரனிறையாற்கூறியருளுதலே வேண்டினாசிரியர்" எனத்தாங்கூறியதற்கேற்பச் சேக்கிழார்சுவாமிகள் திருவாக்கேதேனு மொன்றையெடுத்துக்காட்டுவாரா? அங்ஙனஞ்சிறந்ததாகக்கொண்டபொருள்கோளாலமைந்தமுடிவு ஞானமாகிய-ஞானம், ஞானமாகிய-ஞானம் எனவும், அவை சிறக்கசொல்லுங்குறித்துவருகிளவியுமாய் இன்னதிதுவென்பதுபடவருஉம் பண்புத்தொகைகள் எழுவாய்ப்பொருள்பட நிற்பனவெனவும், அவற்றிற்குப்பின்னிலைப்பெயர்கள் பயனிலையாதலொருதலையெனவுங் கூறினமையானும், "சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகுசிவஞானம் ஆகிய உவமையிலாக்கலைஞானம்" எனவும், "பலமதங்களையறமாறும் பாங்கினிலோங்கியஞானம்

ஆகிய உணர்வரியமெய்ஞ்ஞானம்" எனவும் விரித்துக்காட்டி
னமையானும், இவையே நிறுத்தசொல்லுங் குறித்துவரு
கிளவியுமாய் இன்னதிதுவென்பதுபடவரூஉம் பண்புத்
தொகைகள் ஏழுவாய்ப்பொருள்படநிற்பனவாகிப் பின்
னிலைப்பெயர்களில், நிலையென்பது ஏழாம்வேற்றுமையா
யிருத்தலால், அஃதொழிந்த ஏனைத் தவமுதல்வர் சம்பந்
தர் தாம என்பனவற்றையாயினும, வினையாலணையும்பெய
ராகக்கொண்டிழி உணர்ந்தார் எனபதையாயினும், பயனி
லையாகக்கொண்டு முடிந்தனவாகக்கொள்ளவேண்டும். அங்
ஙனங்கொள்ளின், அது "வினையிற்றோன்றும்பாலறிகிளவியும்,
பெயரிற்றோன்றும்பாலறிகிளவியும், மயங்கல்கூடா தம்மரபினவே"
எனவாசிரியர் தொல்காப்பியனாரகூறியதற்குமாறுகத் தம
திலக்கணப்புலமையா னொருதிணைசசொல் லேனைத்திணை
ச்சொல்லோடு முடிவதாகிய வழுவமைதியென வினியில
க்கணங் கற்பிப்பாரபோலும. ஈண்டிவற்றை யெழுவாய்
வேற்றுமைப்பொருள்படக்கொண்டவா அச்செய்யுளுக்கு
ப்பொருள்விரித்துழி யிரண்டாம்வேற்றுமைப் பொருள்ப
டக்கொண்டனராகலின, இவரவ்விரண்டனுக்குமுள்ளபே
தத்தையும, "அவற்றுள், எழுவாய்வேற்றுமை பெயர்தோன்றுநிலை
யே" எனவும், "பொருண்மைசுட்டல் வியங்கொளவருதல், வி
னைநிலையுரைத்தல வினாவிறகேற்றல், பண்புகொளவருதல் பெயர்
கொளவருதலென், றன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையே" என
வும், "இரண்டாகுவதே, ஐயெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி,
யெவ்வழிவரினும வினையேவினைக்குறிப், பவ்விருமுதலிற்றோன்று
மதுவே" எனவும, "காப்பினொப்பினூர்தியினிழையி, னொப்பிற
புகழிற்பழியினென்று, பெறலினிழவிற்காதலின்வெகுளியிற், செற
லினுவத்தலிற் கறபினென்று, வறுத்தலிற்குறைத்தலிற் றொகுத்த
லிற்பிரித்தலி, னிறுத்தலினளவினெண்ணினென்று, வாக்கலிற்சார்
தலிற்செலவிற்கன்றலி, னோக்கலினஞ்சலிற்சிதைப்பினென்று, வன்
னபிறவு மம்முதறபொருள, வென்னகிளவியு மதன்பாலவென்ம
னோர்" எனவும்வருஞ் சூத்திரங்களையு மறியார்போலும்.

அன்றியும், நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியு
மாய் இன்னதிதுவென்பதுபடவரூஉ மிருபெயரொட்டுப்
பண்புத்தொகை யிவர்முடித்துக்காட்டியவாறு அடையடு
த்துத் தூரான்வயமாக வாராதென்பதூஉம், அதவா அங்ங
னம்வரினும் (ஞானவாழி) என்பதுபோல நிறுத்தசொல்
லீறுவிகாரப்பட்டு, சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகு
சிவஞான-வுவமையிலாக்கலைஞானமெனவும், பவமதனை

றமாற்றும் பாங்கினிலோங்கியஞான - வுணர்வரியமெய்ஞ்ஞானமெனவும் வருமென்பதூஉம் அங்ஙனம்வரினும் ஒருதன்மையவாகியபெயர்களே அதில் நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியுமாய் வாராவென்பதூஉம், ஆயன்சாத்தன், சாரைப்பாம்பு என்பனபோலப் பொதுவுஞ்சிறப்புமாகிய பெயர்களேமாறிமாறி யங்ஙனம்வருமென்பதூஉம், ஞானமாகிய ஞானமெனவிசைத்தல் கழுதையாகியகழுதை, குதிரையாகியகுதிரையெனவிசைத்தல்போல நகைப்புக்கிடமாமென்பதூஉம், பிறவும், "வண்ணத்தின வடிவினளவிற்சுவையினென், றன்னபிறவுமதன்குணநுதலி, யின்னதிதுவெனவரூஉமியற்கை, யென்னகிளவியும்பண்பின்றொகையே" என்னும் ஸூத்திரத்தானுமதனுரையானு முதாரணத்தானு மாய்ந்துணர்தலோடு ஒட்டுதலென்னுஞ் சொற்குரியபொருளையும் யோசித்தறிவாராக.

அன்றியும், ஆசிரியர் தொல்காப்பியனார் "அவற்றுள், நிரனிறைதானே, பெயரினும்வினையினுநினையத்தோன்றிச், சொல்வேறுநிலைஇப்பொருள்வேறுநிலையல்" என்னும் ஸூத்திரத்திற் சிறப்புவகையால் நிரனிறைப்பொருள்கோளிலக்கணங் கூறியிருக்கவும், தாஞ்சிறந்ததாகக்கொண்ட வப்பொருள்கோளிலக்கணத்தைப் பிரமாணமுகத்தாற் சாதிக்கவந்தவர் "கொண்டானைவிட்டுருவங்கூர்ந்தானைக்கூடியிடு, மொண்டொடிக்குண்டோமேலுலகு" என்பதற்கிலக்கா யசூத்திரத்தையொழித்து அப்பொருள்கோளிலக்கணத்தைத் தெள்ளிதினுணர்த்தாததும், தங்கொள்கைக்கு முற்றுமாறாகவேயுள்ளதுமான வேறுஸூத்திரத்தைக் குயுத்தியானாதாரவாகக்கொண்டது அச்சூத்திரம் பிழைபட்டதெனக் கருதினமையாலோ? அதற்குப் பொருடெரியாமையாலோ? தமதுகருத்துக்கு மாறுபடுதலினாலோ? வேறுயாதுகாரணத்தினாலோ? தெரிந்திலது. வேறுதாரணத்தானு மதனைத்தெளிவுபடப் புலப்படுத்தினாரில்லை. முன்னொடுபின் முரணக்கூறுதலேயவரதியற்கையென்க. ஆகலினிவர்சிறப்பாகக்கொண்ட பொருள்கோளை யோசித்தாலிவருக்கேசிரிப்பாகும். மேற்காட்டிய சூத்திரத்தானும், நியாயங்களானும் இனியச்செய்யுளை நிரனிறைப்பொருள்கோட்கிடமாக்கின், "சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகுசிவஞான"மும், "பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞான"மும், முறையே "உவமையிலாக்கலைஞான"மும், "உணர்வரியமெய்ஞ்ஞான"மும் ஆகும் எனமுடித்துப், பின்னர் இவைகளை என்பதுபோலத் தக்கவண்ணஞ்

சிலசொற்களை யிசையெச்சமாக வருவித்துத் "தலமுதல்வர் சம்பந்தர்தாமுணர்ந்தாரந்நிலையில்" எனக்கொள்ளலே தகுதியுடைத்தாம். இவ்வுண்மையை யிவ்விதப்பொருள்கோளுள்ள செய்யுள்கட் கான்றோருரைத்த திருக்குறளுரைகள் பலவற்றானுமுணர்ந்து தெளியவேண்டியது. இனியேனும் நமதிழுக்கவிராயர் யாற்றுநீர், கொண்டுகூட்டு, நிரனிறையென்னும் பொருள்கோளிலக்கணங்களை யிலக்கணமுகத்தானும், ஆன்றோர்முகத்தானுங் கற்றுணர்ந்து அவ்வாறிலக்கியங்களிற் பயின்றுதேர்ந்து, எந்தப்பொருள்கோளத்திருப்பாட்டிற்குரியதோ வதனைச்சித்தஸமாதானத்தோடு மூய்த்துணர்வாராக. எளியவிஷயங்களை யுணர்தலிலேயே யிவ்வளவுவிபரீதமாக விடாப்பட்டுழல்வார்க்கு அரியவிஷயங்களை யறிவுறுத்தலிற் போதப்பயனின்றெனவுணர்ந்தும், விரிவஞ்சியு மிவ்வளவில்விடுத்தாம்.

இங்ஙனநிற்க, கேட்டன்முதலிய ஞானம்நான்கனுள் கேட்டல் சிந்தித்தல்களை அபரஞானமெனவும், தெளிதல் நிட்டைகளைப் பரஞானமெனவும்பிரித்து ஓர்புதுஸித்தாந்தம்நாட்டினார். எமது (தெளிவில்) கேட்டல, சிந்தித்தல், தெளிதலிம்மூன்றும் அபரஞானமெனவும், நிட்டையொன்றே பரஞானமெனவும் நிரூபித்திருக்கின்றோம். நமது பூர்வபட்சியார் சித்தாந்தப்படுத்தியதற்கு நியாயமும், பிரமாணமுங்காட்டுகிலர். தெளிதற்கும் நிட்டைக்கும் நூல்வேண்டாமையும், இரண்டிற்கும் அருளேபற்றுக்கோடாகநிற்கின்றமையுங் கூறியதேபோதுமெனின், நூலையபேட்சிக்குங் கேட்டல சிந்தித்தல்களும் அருணிகழ்ச்சியில்லாதபோது பயன்செய்யா. அருளானது பெத்தமுத்தி யிரண்டிடங்களிலுமிருப்பதாகலின், அது கேட்டலென்னுநிலையினுஞ் சிந்தித்தலிற்சிறிதுவியாபகமும், சிந்தித்தலென்னு நிலையினுந் தெளிதலிற்பெரிதுவியாபகமுங்கொண்டு நிட்டையொன்றின்மாத்திரமே முழுவியாபகங்கொண்டு வர்த்திக்கும். நிட்டையொன்றின்மாத்திரமே மருளவியாபகமற்பமுஞ்சீவிக்கவிடமில்லை. தெளிதலில் அருளதிகாரம், மருளற்பமுமாகச்சீவித்தலால் தெளிதலை நிட்டையோடுபுணர்த்தி யிரண்டையு மோரினமாக்கியது தெளிவின்மையேயாயிற்று. முதன்மூன்றையோரினமாகவும், முடிந்தவொன்றையோர் முதலாகவுங்கண்டறிந்தபேர்க்குப் பரஞானமிரண்டு, அபரஞானமிரண்டு என்னுமபஸித்தாந்தம ஸம்மதப்படாது.

"கேட்டலுடன்சிந்தித்தல் கேடிலாமெய்த்தெளிவால், வாட்டமறு வுற்பவநோய்மாறுமோ-நாட்டமுற்று - மெய்யானநிட்டையிலே மேவினர்கட்கன்றோதான் - பொய்யாம்பிறப்பிறப்புப்போம்." என்று தாயுமானசுவாமிக ளருளிச்செய்த வுண்மையையுங்கண்டறிந்து சுகிப்பாராக. பொறுமையின்றிப்பார்த்தா லுண்மை விளங்கும்.

இனி "என்னையுமுன்னையும்" என்னுமுதலையுடைய வோர்பாடலையுதகரித்து அதில், ஞானஸம்பந்தர் இரண்டுவித ஞானம்பெற்றாரென்று கூறப்பட்டமையால், சேக்கிழார்பாட்டிலு மிரண்டுஞானமேபெறப்பட்டு, அது நிரனிறைப்பொருள்கோளையே யபேக்ஷித்துநிலக்குமென வோர்நியாயங்கண்டுபிடித்தார். அந்தப்பாடலில், (கன்னலங்கழனிக்காழிமாநகரிற்கவுணியனிரண்டு ஞானமுமே, கற்றிடாதுணர) எனப்போந்தபகுதியே பூர்வபட்சியார்தேடிய வாதரவு. (இரண்டுஞானமுமே) என்பது (நான்குஞானமுமே) யென்று லமையாதோ? (நான்குஞானமுமே) எனபதே முடிவென்றறிக. இந்த வுண்மையா லவர்தேடியநிரனிறைப்பொருள்கோள் சேக்கிழார்வாக்கிற்சிறவாது. யாற்றுநீர்ப்பொருள்கோளேசிறந்து விளங்கும். இனி, அந்தப்பாடலும் யாமொப்பத்தக்க பிரமாணமாகாது. ஏனெனின், அது திருவாவடுதுறையாதீனத்தில்வந்த அம்பலவாணதேசிகர் என்னுமோர் சிவனடியாரைத்துதித்தபாடல். இந்தப்பாடலில் ஞானஸம்பந்தரையோர்பக்குவான்மாவாகவும், அவ்வம்பலவாணத்தம்பிரானைப் பரசிவமாகவுங்கொண்டு, அருளுகின்றவர் அம்பலவாணத்தம்பிரானும், அருள்பெறுகின்றவர் ஞானஸம்பந்தப்பெருமானுமாக நிச்சயஞ்செய்திருக்கின்றது. அவ்வம்பலவாணத்தம்பிரானுக்கும், அவரது பரம்பரையின் முதற்கட்டோன்றிய அருணமசிவாயதேசிகருக்கும், அவருக்கும் மூலபுருஷர்களாகிய மெய்கண்டசிவம்முதலாயினோர்க்கும் பரமாசாரியமூர்த்தியாயெழுந்தருளிச சமயாசாரியத்தலைமையெய்திவிளங்கிய ஞானஸம்பந்தரை யவ்வருளாளர் ஸந்ததியிலொன்றுக்கும்பற்றாத வோர்தம்பிரானுக்குத்தாழ்வாகவருவித்துக்கூறியது எவ்வளவுபேராச்சரியம்? இதனை யெந்தச்சிஷ்டர்களோ வொப்புவார்கள்? மடாதிபதிகளைப்பிவந்தார்களோவெனின், சொந்த அபிமானத்தால் பட்சம்நியாயமறியாது என்றபடியாயிற்று. மற்றையதிபதிகளன்றோ வதனையொப்பவேண்டியது? நியாயம் பொது

வாகையால், எம்மைவெறுக்காமல் நியாயத்திற்கட்டுண்டு பதில்கூறுவாராக. பண்டாரமும்மணிக்கோவையில், சிவத்தில்வேறாகாத ஞானஸம்பந்தராகப்பாவித்து ஸ்ரீமாசிலாமணித்தேசிகரை ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் துதித்திருக்கின்றனர். தத்துவவிளக்கத்தில், "விருத்திகளான்மறைக்கின்றவவ்வாணவம்வெங்குருமன, கருத்திய நான்முறைதேரில்" எனக்கூறி, ஞானஸம்பந்தரேபரமபதியாதலினிலை காட்டியிருக்கின்றது. ஒழிவிலொடுக்கத்தில், "தன்மையுமுன்னிலையுந்தானாய்ப்படர்க்கையுமாய்" எனக்காழித்தலைவரையே பதியென்றுகூறி நிலைகாட்டியிருக்கின்றது. இவ்வுத்தமஸம்பிரதாயத்துக்கு விரோதமாகத் தலைகீழ்ப்பாடமுறைத்தபாடலை அஸம்பிரதாயமென யாமொதுக்கினம்.

இதுநிற்க, "மேவருஞானம்" என்னுங் கசியப்பமுனிவர்பாடலுக்கும், "நடைச்சுவஞானப்போனகமுண்ட" என்னும் அருணாசலககவிராயபாடலுக்கும் நமது ஈழநாவலர் தனித்தனியுரைகளெழுதி, அவைகளை "சிவனடியே" என்றும்பாட்டின் பொருத்திகாட்டினார். அங்ஙனங்காட்டியவிடத்து "அப்பெரியபுராணத்திருப்பாட்டின்பொருளைச் சுட்டறவுணர்த்தும் உபப்பிருங்கணமேயாம்" எனக் கசியப்பமுனிவர் பாடலைப் பிரஸ்தாபித்தார். திருத்தணிகைப்புராணமும், சீகாழிப்புராணமும் பெரியபுராணத்தோ டொற்றுமைபெருமையைப் பலபடியால் எமது (தெளிவில்) செவ்வனேவிளக்கினேமாகையால், மீண்டும்மீண்டும் பதிலுரைப்பது அநாவசியமாயிற்று. திருத்தணிகைப்புராணம் பெரியபுராணத்துக்குபப்பிரம்மணமெனப் பூர்வபக்ஷியார்கூறியதோஷத்தை மாத்திரங் களைந்தெறிவாம். திருத்தணிகைப்புராணம் கீர்வாணத்திலுள்ளது. அதனைத் தமிழின்மொழிபெயர்த்தபோது அது மூலத்தோடு ஒத்துவிளங்கவேண்டும். அதற்குமாறாகப் பெரியபுராணத்தினின்று ஞானவிஷயமெடுத்தெழுதப்பட்டது என்றுகூறியது அஸங்கதம். திருத்தணிகைப்புராணத்திற்கூறியது அகத்தியரடைந்தஞானம், பெரியபுராணத்திறகூறியது ஞானஸம்பந்தரடைந்தஞானம். அகத்தியரடைந்தது முன்னும், ஞானஸம்பந்தரடைந்தது பின்னுமாகின்றமையால், பின்னர்ப்போந்த ஸம்பந்தரதுஞானத்தையெடுத்து முன்னைப்போந்த அகத்தியருக்கு விஷயமாக்குதல் யாங்ஙனம்? இந்நியாயத்தால், திருத்தணிகைமூலபுராணத்தி லில்லாததைப் பெரியபுராண

த்திலிருந்தெடுத்துச்சேர்த்து அந்தமூலபுராணத்தினுண்மையைக் கசியப்பமுனிவர்சிதைத்தனர் என்றுந்தோஷமவர்தலைமேல் வந்தேறும். இவ்வுண்மைதெளிந்தபேர் பெரியபுராணத்துக்குத் திருத்தணிகைப்புராண முபபிராஹ்மணமெனக்கூறத்துணியார்கள். இதனை யினியேனு நமது பிள்ளைநாவலரறிந்து பேசாதடங்குவாராக. அருணாசலக்கவிராயர் சீகாழிப்புராணத்தை மொழிபெயர்த்துமாத்திரமெமக்கொப்பேயன்றி அம்மொழிபெயர்ப்பி லவரறியாமையாற்கூறிய வாபாஸங்களெல்லா மெமக்கொப்பாகா. அவர் "இராமாயணக்கீர்த்தனை" என்றுநூலொன்று செய்திருக்கின்றனர். அதில, "ராசன்வில்லைமுறித்ததறகோ" எனவும, "ஆனைமுகனேயாஞாதிருமகனே - சேனையர்கோனுக்கவளஞ்செய்வோனே" எனவுங்கூறினார். இங்ஙனங்கூறுந்தோஷிணையுமோர்சிவனடியாரென்று கொள்ளலாமா? சேனையர்கோன்=விஷ்ணுவினது தலைவாசலிற் சேவகஞ்செய்யுமோர்சேவலாளி. இவ்வாறு விநாயகமூர்த்தியைநிந்திக்கத்துணிந்தவரின்னுமெதற்குத்தான் றுணியமாட்டார்? இவைகளேயன்றி, "ஆதிசிவனுமைகாதிலேசொன்ன" ராமமந்திரம் எனவும, "இடமாயிதாலவைக்கூட்ட பிழைகண்டுசிவன்பண்டு-சிரங்கொய்ததல்லோவீரம்" எனவும் அந்தக்கவிராயர் மண்மாரிபொழிந்திருக்கின்றார். இவரதுசைவம இவரைமெய்ச்சுமபிச்சாகளுக்கன்றி யேனையோர்க்குத் துச்சமேயாம். இதனையறியாத பாவிசாரிய வோர்போலியவதானியார் தாம்பரிசோதித்து வெளிப்படுத்திய சீகாழிப்புராணத்தில், ஷை கவிராயரது புராணவைபவமெழுதியபகுதியில் "இராமாயணத்தை-கவிராயர் - சிவோத்கர்ஷம்பாதியாதபாடி" னர் என மெச்சித்துதித்தார். இப்படியஸங்கதப்பட்டழியுங் கவிராயரது ஞானத்தை யாம் விஸ்புருஹமாகவொதுக்கினம்.

இங்ஙனமிற்க, நமதுவேஷநாவலர் "அவர் இரண்டுஞானத்தில் நான்குஞானம் அடங்காவென்றது இரண்டில் நான்கு அடங்காவென்னும கணிதஞானங்கொண்டுபோலும். இக்கணிதஞானங்கொண்டு ஒன்றாயுள்ளமாயையில் பலவாகிய தத்துவதாத்துவிகங்கள் அடங்காவெனறும், ஒன்றாயுள்ளபராசத்தியில் பலவாகிய சத்திபேதங்களடங்காவென்றும், இங்ஙனங்கூறவும் முயல்வர்போலும்" என வெமதுநாயகரவர்களைப் பரிஹஸித்துஅழகொழுகிப்போயினர். நமமவர் கணிதஞானத்தா லிரண்டில் நான்கடங்காதென்று ஒப்புக்கொண்டார். யாம் இரண்டுஞானத்தில் நாலுஞானமடங்காவென்று கூறியது கணிதஞானம்

பற்றியேயாம். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்பவற்றுள் நான்குஎன்பது பெரியவெண்ணும், ஏனையவை சிறியவெண்களுமாகையால், நான்கு ஏனையவெண்களிலடங்காமையும், ஏனையவெண்கள் நான்கிலடங்குவதுமெமது மதமாயிற்று. இதனால், நான்குஞானத்தில் மூன்றுஞானம், இரண்டுஞானம், ஒருஞானமிவைகளடங்கும். அந்நான்குஞான மிவைகளிலடங்காது. ஒன்றாயுள்ள மாயையில் தத்வதாத்விகங்களும், ஒன்றாயுள்ள பராசத்தியில் சத்திபேதங்களு மடங்குமேயெனின், பலவாகிய தத்துவங்களும், பலவாகிய சத்திகளு மவ்விருமுதல்களின்காரியமாகையால் அதுகூடும். கேட்டலாதிஞானங்களோர்முதலினின்று காரியப்பாடாயினவல்ல. நாலும் நான்குமுதல்களாம். அவற்றுள், முறையே கேட்டல் செவிக்கும், சிந்தித்தல் சித்தத்திற்கும், தெளிதல் அறிவிற்கும், நிட்டை அறிந்தோமென்பதற்றவிடத்திற்கும் விஷயமாகலானிந்தஞானங்களைத் தனிமுதல்களாகக்கொள்வதன்றி வேறொன்றிலிருந்து காரியப்பட்டனவெனல் கூடாது. இந்நான்கும் பரம் அபரமென்பவற்று ளடங்குமேயெனின், பரம்அபரம் என்னுமவை கேட்டலாதிகளுக்கு வேறுபெயர்களேயன்றிக் கேட்டலாதிகளைவிட்டு அவையோர்தனிமுதல்களாகா. பரஞானத்தின்காரியம் நிட்டையும், அபரஞானத்தின்காரியம் கேட்டலாதிகளுமாயினது நிலைக்கும்? பரஞானமே நிட்டையும், அபரஞானமே கேட்டலாதிகளுமாயினமையால், பூர்வபட்சியாரதுமதம் புண்ணாயழிந்தது. பரஞானமோர்முதலும், நிட்டை யதன்காரியமுமாயின், நிட்டைக்கிலக்கணங்கூறுவதுபோலப் பரஞானத்திற்கு மோரிலக்கணங் கண்டுகூறுதல்வேண்டும். புதுஇலக்கணங்கற்பித்தல் நமது புதுநாவலருக்கேயன்றி முன்னுள்ள பெருநாவலர்கட்கேலாது. பரம்அபரம் என்பவற்றிற்குக் கேட்டலாதிகள் வேறுபெயர்களானவிடத்தும் முன்னிரண்டில், பின்னான்குமடங்குமெனின், அடங்கா. எங்ஙனமெனின், அவையொன்றினொன்றடங்கும்வழி இரண்டு-நான்கு என்னும் விவிதமற்றுவிரவுதலால் இரண்டில், நான்குஅடங்குமென்னும்வாதம் நசித்தது. இரண்டொருமுதலும், நான்

கொருமுதலுமாயிருந் தொன்றினொன்றடங்காம லிரண்டு
நான்குங்கெட்டடங்குதலால், நாவலர்மதம் நாற்றமெடுத்
துவிட்டது. யாம் நாலிலிரண்டடங்குமென்றது கணித
ஞானநோக்கத்தாலாகையா லெம்பக்கலந்தத்தோஷம்வந்
துசாராது. இதனால், நமதுபண்டிதர் தொடுத்தவிஷயமு
ம், அதற்குக்கொடுத்த மாயை, சக்தியுபமானங்களும் அவ
ரைக்கொல்லும் விஷமும், மயிர்ப்பாலமும், நெருப்பாறு
மாகமுடிந்தன.

இதற்குமேல், "கேட்டலுடன்சிந்தித்தறெளிதனிட்டை-இ
ளைத்தலெனவீரிரண்டாங்கிளக்கின்ஞானம்" என்னும் பகுதியிற்
கேட்டல்-சிந்தித்தல்களோரினமும், மற்றைத்தெளிதல் நி
ட்டைகளோரினமுமாகுமெனக்கூறிக் கேட்டல் சிந்தித்த
ல்களினிடையில (உடன்) என்றுவந்தவமைதியே யவைக
ளைப்பிரித்திரண்டினமாக்கினவென வோர்நியாயங்கண்டுபி
டித்து, இதற்கும் பெரியபுராணத்திருப்பாட்டின் முக்கிய
ப்பொருட்கும் யாதோரியையுமில்லையெனவும், அதனால்
"கேட்டலுடன்" என்னுமந்தப்பாடல் நமக்கு இஷ்டவிகா
தம்பண்ணி அந்நாவலருக்கே பலந்தந்ததெனவும் பொ
ங்கிவழிந்தனர். இதனைப்பார்க்குந்தோறும், நினைக்குந்தோ
று மிவ்வளவு புத்திசாலியை யிதுவரையில் யாமகாணாத
வாச்சரியம் எம்மைத்தன்வசப்படுத்தி அடக்கமுடியாத
சிரிப்பை யுண்டுபண்ணுகின்றது. கேட்டல - சிந்தித்தல்க
ளோரினமாதற்கு அவற்றினிடையில் (உடன்) எனவோர்
பிரயோகம்வந்ததுபோலத் தெளிதல் - நிட்டைகளோரின
மாதற்கு அவற்றினிடையில் (உடன்) எனவோர்பிரயோக
மேன் வரவில்லை? (கேட்டலுடன் சிந்தித்தல்) என்பது
போலத் (தெளிதலுடன் நிட்டை) எனவரினன்றோ அமை
திபெறும்? பூர்வபட்சியா ரொன்றினிடத்திற்காட்டிய நியா
யம் மற்றொன்றினிடத்தில விபசரித்தலா லவரதுபட்சம்
நிரஸ்தமாயிற்று. அவரது நியாயத்தையநுஸரித்தால் கே
ட்டல் சிந்தித்தல்களோரினமும், தெளிதலோர் முதலும்,
நிட்டையோர் முதலுமாகி மூன்றுஞானத்துக்கு முத்தலை
போட்டதாகின்றது. அவர்விரும்பியபடி யிரண்டிரண்டை
யோரினமாக்கவேண்டின், கேட்டலுடன் சிந்தித்தல்-தெளி

தனுடன் நிட்டை எனவமைந்திருக்கவேண்டும். அல்லது கேட்டல்சிந்திதல் (உடன்) தெளிதல்நிட்டை எனப்பொருந்தியிருக்கவேண்டும். இவ்வளவு கூர்ந்துணரவல்லாரல்லராகிய நமது நண்பரதுமதிநுட்பம் சாலவழகுடைத்து. அன்றியும், (உடன்) என்னும் பிரயோகம்வந்ததுகொண்டே இரண்டிரண்டை யோரினமாக்கியது அறியாமையேயாம். (கழுதையுடன்குதிரைமறி பசுவென்றுயிவைநான்குங்காணின்மேலோா) என்னும் பிரயோகத்தில் கழுதையுங்குதிரையுமோரினமும், ஆடும் பசுவுமோரினமுமென்றுகூறுதல் யாங்ஙனம்? இப்படிப்பூர்வபட்சியினதுமதம் அலக்கண்பட்டழிந்தமையால், "சிவனடியே" என்னும்பாடலில் கேட்டலாதிகள் அமுக்கியப்பொருளெனவும், தமதிருஞானமே முக்கியப்பொருளெனவுந்தாபிக்கவந்தது தடுமாறிப்போய்விட்டது. இன்னும், ஞானஸம்பந்தரை ஸாமுசித்தரென்று பூர்வபட்சியார ரொரத்துக்கொண்டிருக்கின்றமையால், ஸாமுசித்தரிலக்கணத்திலொன்றுத அபரஞானம் அவரைத்தெருவில்விட்டது. அபரஞானஸம்பந்தமற்றபோது இரண்டு ஞானப்பிரஸக்திற்கிடமேயில்லை. இஃதிவ்வாறொழியவே, சேக்கிழார்திருவாக்கி லிரண்டுஞானஞ்சாதித்தலும், அதனை கிரணிறைப்பொருள்கோளாற்றமுவிநிறுத்தலு நிஷ்பலமாயிற்று. ஞானஸம்பந்தரை ஸாமுசித்தரெனக்கூறி, அவர்மாதாவுதரத்திற்றங்கிப்பிறந்தாரென்று நமது கோப்பாய் நாவலர் கூசாதுரைத்தமையால், அவரிறந்தார், அவருக்கிழவுநடந்ததென்று அஞ்சாது கொஞ்சியுரைப்பார்போலும். இவரதுபுண்ணியமே! புண்ணியம!!, இவ்வவதிநாவலர் சைவவரம்பைக்கெடுக்க வெங்கிருந்துதலைப்பட்டாரோவறியேம். ஞானஸம்பந்தரிடம் துவேஷம்விளைவது சமணர்களுக்கே முக்கியமாகச்சிறக்கும். நமதுஈழநாவலர் ஞானஸம்பந்தரிடத்தி லடாதமிழைக்குஞ் சமணரென்பதேஸித்தம். விபூதிருத்ராக்ஷமுதலிய சிவவேடம் சைவரைவஞ்சித்தற்கு மேற்கொண்டொழுகியதென்றறிக. இவ்வளவுகொடுமையை நமது யாழ்ப்பாணமஹாவித்வானன்றி வேறுயாருஞ்செய்யார்! செய்யார்!! இவர் அநியாயமாக ஞானஸம்பந்தரைத்தூஷிக்கத் துஜங்கட்டிக்கொண்டாரோ! எம்பெரியாரதலைவக்கண் ணரைகளபோதேனும் அதுநிலைத்

தல்கூடுமா? அவரது காற்கடைகொண்டொதுக்க வொது க்கிப்போமென்க. இந்தமஹாபுத்திமான் தான்றன்வழியே போகாமல் எமதுகாலையேன்மிதிக்கவேண்டும்? அதற்குமே லெம்பாற்கிடைக்கும்பரிசிற்கு அவரிரங்கலாமா? இவரெந் தெந்தவிஷயத்தைத்தொட்டு விவகரிக்கின்றாரோ, அந்தந் தவிஷயமும் அவரைத்தெரியாதவரென்னும்பட்டத்தையே தாங்கச்செய்து நிலைபெறுகியது. இவர் தம்மையதிகமாகம தித் திறுமாந்திருந்ததும், இவரது பேய்க்கூட்டங்க ளிவ ரை அஸஹாயசூரரென்றுகொண்டாடித்திண்டாடியது மெ மதுகையினின்றும்வெளிப்பட்ட வஜ்ராயுதமென்னுமிந்த வுண்மைநூலாற்சிதைந்து மூலதோஹானிநேர்ந்தமையால், நமதுஈழநாவல ரினியேனுமடங்கியொடுங்கி வாழ்வாராக.

இவ்விருஞானநாவல ரிம்மட்டேயமையாமல் கேட்ட ன்முதலிய நான்குஞானங்களையுஞ் சேக்கிழார்பாடலின் முக்கியப்பொருளாகக் கொள்வதுதவறெனவும், அஃ்தாசி ரியருக்குக்கருத்தாயின், கலைஞானம், சிவஞானம், பாங்கி னிலோங்கியஞானம், மெய்ஞ்ஞானம் என முறையேவமை த்திருப்பரெனவும், அங்ஙனமின்றி யவைகளை முறைமாறி வைத்திருக்கின்றனரெனவும், அதனால், பரஅபரஞானங்க ளே சித்தாந்தப்பட்டனவெனவுந் தாமெடுத்தகட்சிக்கோ ராதரவுதேடினர். இவ்வாறுகூறிய செந்திநாதையரவர்க ளுக்குத்தக்கவெகுமானம் எமது (தெளிவில்) செய்திருக்கி ன்றேமாகையால், அதுவேவெகுமான மிவருக்குஞ்செய் தோம். அதனைத் திருப்தியாகப்பெற்று ஸுகிப்பாராக. எம் மேற்குறைகூறவேண்டாம். யாம் அவருக்கொருமாதிரியும், இவருக்கொருமாதிரியுமாக வஞ்சனைசெய்யவில்லை. அவர வா யோக்யதைக்குத்தககவாறு எந்தெந்தவிஷயத்தி லெந் தெந்தப்படிச்செய்யவேண்டுமோ, அந்தந்தவிஷயத்தி லந்த ந்தப்படிச்செய்துவருகின்றேம். சிலவமிசங்களில் ஐயரவர் களைககாட்டிலும் நாவலர்வைபவமதிகரித்தலா லவரதுவிப வத்திற்சேற்பக் கொஞ்சமதிகமாகவே யவருக்குமரியாதை நடத்திவருகின்றேம். நமது பிள்ளைநாவலரதுசூடாமணி யித்தோடேசுருண்டுவிட்டதாகையால், யாமுமிவ்வளவில் விப்ராந்தியடைந்தோம். எங்களுடையவிளக்கத்திலடங்கி

யவெல்லாவிஷயங்கட்கும் பதில்கூறும மேலோர்மூலையிலுள்ள வேகதேசவிஷயங்களையெடுத்துப் பொய்யுமெய்யுமாகக்கலந்துபெருக்கிக்காட்டித் திட்டியமறுப்பு நேத்திரயங்சத்தையடைந்தமையாலும், எமது(தெளிவு, துணிவு) என்னும் பின்னூல்கள் அவரதுபிடரியையிறுகப்பிடித்துவிட்டமையாலும், அவரது அஞ்ஞானசூடாமணியாகிய வாபாசத்திரட்டில் நியாயமணமோரற்பமும்வீசாமையாலும் அவரதியற்கையைநாடி அவர்மாட்டிரங்கி அவருக்குக்ஷேமமுமுண்டாமாறு திருவருளைச்சிந்திக்கின்றேம்.

## காழிப்பிரானார்துதி.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிவனடியேயெனும்பனுவற்பொருள்சிதையவிருஞானஞ்செப்பியெ
டவமுதல்வர்சம்பந்தர்தமைச்சாமுசித்தரெனச்சாற்றிநீடு [ங்க
பவம்பெருக்கிஞாயமொருசிறிதுமுணரார்நிந்தைபடிப்பார்நிமை
யுவந்தெரிவாய்நிரயமுமீழாதவனாயென்ஞான்றுமுன்மைதானே.௧

காழிநகர்வந்தருளுங்கண்மணியைப்பசுவாகக்கழறுவானைப்
பாழியுடைச்சமண்குண்டப்பதிதனெனக்கூறுதலேபான்மையாமால்
ஆழியுடைசூழுலகிலவர்தாங்கும்பொய்வேடமந்தோவந்தோ [டோ.
ஊழிதொறுமொழியாதகொம்புக்குயராய்விளையுமெனினுறுதியுண்

எம்பெருமான்சம்பந்தனிலகுசராசரப்பகுதிக்கெல்லாந்தானே
செம்பொருளாதலுமுணரார்சிவன்மகனாதலுமுணரார்சிவனுஞான
மும்பர்வழுத்தொருநான்காதலுமுணராருரைத்திடவுங்கேளார்நாளு
தம்பெருமையேபேசித்தருக்குறுவாரவர்பாவஞ்சாற்றொணாதே. [ந்

அவஞானந்தெறக்காழிவருமமலவாழ்வினையெம்மரசையன்று
சிவஞானங்குழைத்தமைதாஞானப்பாலுண்டதெய்வவாழ்வைத்
தவஞானப்படிவத்தெந்தனிமுதலைத்துறைசைவளர்தம்பிரானுஞ்
சிவஞானமுனியோடுசேர்த்துரைப்பாரவர்பாவஞ்செப்பொணாதே.௪

பவம்பெருக்கும்படிற்றமணப் பாவிகள்போலிஞ்ஞான்றும்படிற்று
ளங்கொண், டவம்பெருக்குந்தொழில்காட்டியன்புடனேபொறை
காட்டாதழுதுசில்லோர், சிவம்பெருக்கும்பிள்ளையினையோனிவாய்

ப்பட்டயர்ந்துசெனித்தாரென்று, சவம்பெருக்குமுகத்தினராய்நிற்
னைபகர்ந்தழிவாரவர்தன்மையெனனே. (௫)

பாலஞர்ந்தெ ண்டியற்றிப்பண்டுமின்றுமுன்னையெனப்பணித்தவாக்
கிலமுணராதந்தோமாறுகொளக்கூறியொருசிறிதும்வாயமை [தின்
யேலவுணராதிறுமாந்திழிவேயின்பெனமார்திமிருக்குமூடர்
பாலனுகாதிருந்திடலேபண்ணியநற்புண்ணியத்தின்பயனுமன்றே.

வடியேறுமயிற்கரத்துமாமணியைக்கவுணியர்தம்வாழ்வையெம்மு
ட், குடியேறுபெருந்தவத்தைக்கோமளத்தைச்சிரபுரத்துக்கொழுந்
தையன்று, மிடியேறுகொடுஞ்சாரிப்புத்தனிகல்கூறவவன்வெந்துவீ
ழ, இடியேறுவீழ்ந்தபடியெனறுவிழுமோவிடிதானேதிலார்க்கே. ௭

மழுவேறுகரத்தமலனிடத்துமைப்பான்மணங்கமழும்வாயினின்றுந்
தொழவீறுமமுதமெழாழிக்கேனைத்துணையும்வாதினிடந்தோற்றபேயா
கழுவேறிஞரிந்தக்காதையுலகறியுமருட்காழிநாதன்
குழுவேறுமவனைக்காணார்கழுவேறலன்றியெதுகூடுவாரே. (௮)

மண்முகத்திலெழிற்சிற்றம்பலநாடியருணகிரிவள்ளலாதி
பண்முகத்தமொழிப்புலவர்சம்பந்தப்பெருமானைப்பாடியெங்கள்
சண்முகத்துப்பெருமகையேயென்றுதுதிகூறியருள்சார்ந்தாரின்று
கண்முகத்தில்லாக்குருடாபோன்றுசிலர்வாதாடிக்கலங்கினரே. (௯)

வதுவையெனப்பேரிட்டு வரித்துயிர்கடமைமுழுத்திவளநாடெய்தச், சு
துமெனச்சிற்சோதியினிற்கலந்தொன்றாயிடச்செய்தகருணைவாழ்வை
ப், பதியெனக்கொண்டின்புறுதல்யாவகாமப்பாங்கொருவிப்பாவநீடு
மதியுடையாரிவருமொருசிவனடியாரென்பரிதுமருளாமன்றே. (௰)

## வாழ்த்து.

"வாழ்க ஞானசம் பந்தன் மலர்க்கழல்
வாழ்க நால்வித ஞானங்கள் வண்பொழில்
வாழ்க மாதுமை மாதவன் மாதவர்
வாழ்க நீற்றெறிழில் சைவமும் வாழ்கவே."

## திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருபரப்ரஹ்மார்ப்பணமஸ்து.